# ாலசிங்கப் பனுவல்





# பாலசிங்கப்

# பனுவல்

30-04-2005

இ·து

யாழ் மாவட்டத்து வடமராட்சி உடுப்பிட்டியைச் சேர்ந்த
சைவப்பெருங்குடித் தோன்றலும்,
பெருந்நிலக்கிழாரும், செல்வந்தருமாகிய
காசிநாத உடையாரின் வழித்தோன்றலும்,
முருகுப்பிள்ளை கதிரிப்பிள்ளை – மாணிக்கம்
தம்பதிகளின் அன்பு மகனும்
வடமராட்சி அல்வையம்பதியைச் சேர்ந்த
உத்தம சைவ வேளாண் குலத்திலகருமான
தினகரிப்பிள்ளை உடையாரின் வழித்தோன்றலுமாகிய
அமரர் சி.கனகரத்தினம் திருமதி.க.தங்கம்மா ஆகியோரின்
அன்பு மருமகனும் கமலினி அவர்களின்
அன்புடை வாழ்க்கைத் துணைவரும்,
கிருஷ்ணானந்தன், கிருஷ்ணகுமாரி, கிருஷ்ணகுமார்,
கமலகுமார், கலைவாணி, மதிவதனி, உமா
ஆகியோரின் பாசமிகு தந்தையும்
சிவச்சந்திரதேவன், அருந்தவராணி மனோரஞ்சினி,
புஸ்பகுமார், சூரியகுமார்,
ஆகியோரின் அன்புமாமனாரும்,
சஜிஷ்ணவன், சமாஹிதன், சுகநிதன், சைந்தவி, தர்ஜனிஹிதன்,
ஹம்சப்பிரியா, அபீஷ்டகன், இராகவி ஆகியோரின்
பாசமிகு பேரனுமாகிய

# அமரர் பாலசிங்கம்

அவர்களின்

# நினைவுப் பனுவல்

**30-04-2005**

# சமர்ப்பணம்

தன் உடல், பொருள்,
ஆவி, அனைத்தையும்
எமது நல்வாழ்விற்காய்
அர்ப்பணித்து
அன்பும் பண்பும் அறிவும் பாசமும்
எமக்களித்து
என்றும் எம் உணர்விலும் உயிரிலும்
நீக்கமற நிறைந்து
எம்மை ஆசீர்வதித்துக் கொண்டிருக்கும்
எமது ஆருயிர் தந்தையின்
திருப்பாதங்களுக்கே
இப்பனுவல்
சமர்ப்பணம்.

உ



தெய்வம் யாதனைச் சேர்ந்துஎவர் போற்றினும் அந்தத்
தெய்வ மாய்இருந்து அவர்க்குஅருள் வரங்களைச் செறிக்கும்
தெய்வம் தேர்வரும் பிரம்மஆ இயவிநா யகனே;
தெய்வம் யாவையும் வழிபடும் தேவனும் அவனே.




| | |
|---|---|
| 1922.05.24 | 2005.03.30 |
| ஐங்கரன் பணியில் | ஐங்கரன் அடியில் |
| மண்உறவு | விண்ணமர்வு |

# ஸ்ரீமான்.கதிரிப்பிள்ளை.பாலசிங்கம்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டிலுயர் தாரணப் பங்குனித் திங்களில்
பூண்டபர பக்கத்துப் பஞ்சமி - மாண்பிலுயர்
செம்மலாம் பாலசிங்கமெனும் நாமத் தாத்மனுயிர்
சேர்ந்ததே ஐங்கரன் தாள்.

உ



திருச்சிற்றம்பலம்

# தோத்திரப்பாடல்கள்

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூடுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு- முருவாக்கும்
ஆதலால்வானோரும் மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

## சமயகுரவர்துதி

**பண்: நட்டபாடை**

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழியிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூர்திருத் தாள்போற்றி

**முதலாம் திருமுறை** **தேவாரம்** **பண்: நட்டபாடை**

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

**பண்: பழந்தக்கராகம்**

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே என்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

**இரண்டாம் திருமுறை** **பண்: சீகாமரம்**

கீதத்தை மிகப்பாடு மடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே.

**மூன்றாம் திருமுறை** **பண்: காந்தாரபஞ்சமம்**

இடரினுந் தளரினும் எனது றுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே.
இதுவோ எமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

**நாலாம் திருமுறை** **பண்: காந்தாரபஞ்சமம்**

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

**ஐந்தாம் திருமுறை** **பண்:திருக்குறுந்தொகை**

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே

**ஆறாம் திருமுறை** **பண்: போற்றிதிருத்தாண்டகம்**

எல்லாம் சிவனென்ன நின்றாய் போற்றி
எரிசுடராய் நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி
கொல்லுங்கூற் றொன்றை யுதைத்தாய் போற்றி
கல்லாதார் காட்சி கரியாய் போற்றி
கற்றா ரிடும்பை களைவாய் போற்றி
வில்லால் வியனரணம் எய்தாய் போற்றி
வீரட்டங் காதல் விமலா போற்றி





**பண்: திருத்தாண்டகம்**

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாராத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யான்அவனென் கண்ணு ளானே.

**ஏழாம் திருமுறை** **பண்: நட்டராகம்**

பண்டே நின்னடியேன் அடியாரடி யார்கட்கெல்லாம்
தொண்டே பூண்டொழிந்தேன் தொடராமைத் துரிசறுத்தேன்
வண்டார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்டா நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே.

**பண்: பஞ்சமம்**

தானெனை முன்படைத்தான் அத றிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயி னேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்த யானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே.

## திருவாசகம்

**எட்டாம் திருமுறை**

போற்றியோம் நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்.
போற்றியோம் நமச்சியவாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோம் நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோம் நமச்சிவாய சயசய போற்றி போற்றி.

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்ட டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரானென்னைத் தாங்கிக் கொள்ளே.

## திருவிசைப்பா

**ஒன்பதாம் திருமுறை** **பண்: பஞ்சமம்**

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

**பண்: பஞ்சமம்**

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்துபாரார்
தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

**பத்தாம் திருமுறை**

ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவது
நன்றுகண் டீர்இனி நமச்சிவா யப்பழந்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே.

**பதினோராம் திருமுறை** **பண்: இந்தாளம்**

சூடு மதியம் சடைமேல் உடையார் சுழல்வார் திருநட்டம்
ஆடும் அரவம் அரையில் ஆர்த்த அடிகள் அருளாலே
காடு மலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடி ஆடப் பாவம் நாசமே.

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கூற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.





## பெரியபுராணம்

சொல்லுவ தறியேன் வாழி! தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லைவந் தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி!
தில்லையம் பலத்து ளாடும் சேவடி போற்றி! என்ன

## திருப்புகழ்

காலனார் வெஞ்கொடுந் தூதர்பாசங் கொடென்
காலினார் தந்துடன் - கொடுபோகர்
காதலார் மைந்தருந் தாயராருஞ் சுடுங்
கானமே பின் தொடர்ந் தலறாமுன்
சூலம் வாள் தண்டு செஞ் சேவல் கோதண்டமுஞ்
சூடுதோ முந்தடந் - திருமார்புந்
தூயதாள் தண்டையுங்காண, ஆர் வஞ்செயுந்
தோகை மேல் கொண்டுமுன் - வரவேணும்
ஆலகாலம்பரன் பாலதா சஞ்சிடுந்
தேவர்வா ழுன்றுகந் தமுதீயும்
ஆரவா சஞ்செயும் வேலைமேல் கண்வளர்ந்
தாதிமா யன்றனன் - மருகோனே!
சாலிசேர் சங்கினம் வாவிசூழ் பங்கயஞ்
சாரலார் செந்திலம் - பதிவாழ்வே
தாவுசூ ரஞ்சிமுன் சாயவே கம்பெறுந்
தரைவே லுந்திடும் - பெருமாளே!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கலோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



# இஷ்ட தெய்வப் பாமாலை

### உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் துதி

காலை மாலை கருத்தொடு கண்ணு ளொளியாய் நிதம்
பாலைப் பொழிதரு பசுவின் தலைக்கன்று உளநெகிழ்வாய்
வேலை வில்லட்டி வியனுலகப் பரிணாமப் பனுவலுளே தனைப்பூ
மாலையாக்கிப் பண்டகைப் பிள்ளையாரைப் பாடிப்பரவிச் சூடினரே!

சூடினரே பிள்ளையாரின் சூசனத் தாள் சிரசிற் பாலசிங்கமென்றும்
ஆடினரே அல்லும்பகலும் அவரன்பில் தைவருசிந்தைத் தோய்வி
லூடினரே பக்திப் பனுவலில் பால் கலந்த தேனாயிறுதி மூச்சுடன்
கூடினரே குஞ்சிதபாதமிக் குவலயம் விட்டு வானுறவாயே!

### உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரர் துதி

பக்தியில் வீரமாய் புத்தியில் தீரமாய்
சித்தியில் சூரனாய் வித்தைக்கு வித்துமாய்
நித்தியா நித்திய சத்சங்க லோகமாய்
முத்தியை முகிழ்ந்த எந்தையை வீரபத்திர முன்வையே!

சித்தம் சிவன்பாலாய் சிவணிய சித்தாந்தப்
புத்தம் புது ஒளியாய் தெளிவாய் யாவர்க்கும்
உத்தியைப் புத்தியை உள்ளுணர் வூட்டிட
கத்தியும் நத்தியும் கருமமாற்றிய பேறு கைலையே!

### தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் துதி

நிதியுள் பெருநிதேயே கதியே சந்
நிதியுன் தலம் தவறாதுவந்து பணிந்து
விதியின் வலிகிழிய வேல் சூர் பிழந்த சந்
நிதியே நின் சரணாக்கிய எந்தை நின் சந்நிதியே.

### கெருடயம்பதி வீரமாகாளி அம்மன் துதி

மருள் நீக்கி மக்களின் மதியுட்புகுந்து
தெருள் தேக்கி ஞானோதயம் வரும்
அருள் ஒளியே பழையே வீரமாகாளியே உலக
இருள் வாழ்வு விட்ட தந்தைக்கு அருள்தாயே





### வல்வைச் சிவன் துதி

தில்லையில் நடமிடும் திரிலோக மூர்த்தியே
வல்லைச் சிவனே யுனைவலம்வந்து எந்தை இவ்வுலகத்
தொல்லை நீங்கத் தொழுதழுத தாலுன்னைப் பெற
வல்ல வைராக்கியம் தந்து வாசியாக்கினை வாழியவே!

### அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் துதி

நல்லார் மனத்துறைந்து நயந்து பக்தி செய்வார் பணியாகிக்
கல்லாத மாந்தருக்கும் கசடறுத்துக் கண்நோக்கும் கண்ணகியே
எல்லாருமுன் பிள்ளைகளம்மா பெற்றவள் நீபொறுப்பதுன் கடனே
வல்லாம்பிகையே வந்துபணிந்த எந்தையைக் காக்குதியே

### வல்லிபுர ஆழ்வார் துதி

ஆழிதுயில் அரங்கனே சுனாமியழியாட்டில்
லொழிந்திருந்தாலுமுன் தாமரை மலர்த் சஞ்சத்
தூழி வேண்டித் துயில் நீத்துத்துதி செய்யெம்தந்தை
ஊழிற் பெரிவலியறுத்து உய்திமெற வைக்குதியே.

### விநாயகர் வணக்கம்

திங்களனி சடைப்பெருமான் பூசை ஆற்றித்
திரிமதிலும் கடந்திடமுன் நின்றான் யாவன்?
தங்கு கடற் புவிவரைப்பில் நெடியோன் ஆதி
சகலருக்கும் ஊறு தவிர்க் கின்றான் யாவன்?
அங்கவண்மெய்ச் சரிதம்மொழி பெயர்ப்ப வேண்டி
அவனடியே சரணாக அடுத்து ளேற்கு
மங்கலசின் மயமதுரத் தமிழ்ச்செம் பாடல்
வாரிமட மடையுடைத்து வளரும் அன்றே.

அகரமென அறிவாகி உலகம் எங்கும்
அமர்ந்து அகர உகரமக ரங்கள் தம்மால்
பகருமொரு முதலாகி வேறும் ஆகிப்
பல்வேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொருள் நான்கினையும் இடர்தீர்த்து எய்தப்
போற்றுநருக்கு அறக்கருணை புரிந்துஅல் லார்க்கு
நிகரில்மறக் கருணைபுரிந்து ஆண்டு கொள்ளும்
திருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

### சித்திபுத்தி வணக்கம்

கருணைமதம் பொழிமுகத்துக் கணேசர் அவர்
தமக்கு அறிவும் தொழிலும் ஆன
அருளெனும்உண் மையை எவரும் அறிய அவர்
உமையின் அவதரித்த ஞான்றும்,
ஒருமுனிஓம் பியதழலின் அவதரித்த
ஞான்றும் உட னாகித் தோன்றித்
திருவுளத்தின் வழிநிற்கும் சித்திபுத்தி
எனும் இவர்தாள் சென்னி சேர்ப்பாம்

### முருகக் கடவுள் வணக்கம்

மரம்துளைத்த கணையானும் சோரஎறிந்த
திறலானும் மதிக்கும் தோறும்
சிரம் துளக்கும் அலைகடலும் சேணிகந்த
பெருவரையும் திறத்தில் குன்றக்
கரம் துளக்கும் குறுமுனிக்கும் கருத்தில்மயல்
பூட்டியகை தவம்சால் வெற்பின்
உரம்துளைத்த சேஇலைவேல் வலன் உயர்த்த
இளையவனை உளத்துள் வைப்பாம்

### பரசிவ வணக்கம்

பூமாது தனைமணந்த புயல்வண்ணம்
பெருமாளும், புலவர் போற்றும்
நாமாது தனைமணந்த நான்முகனும்
போர்மாதும் நயக்கும் எண்தோள்
கோமானும் தானேயென்று உணர்த்துதற்கே
பிரணவகுருஞ் சரமாய்த் தோன்றி
மாமாவின் முகத்தானை உயிர்த்ததானை
நினைந்து இறைஞ்சி வழுந்து வாமே

### சிற்சத்தி வணக்கம்

சத்தியாய் விந்து வாய்மனோன் மணியாய்த்
தயங்கிய மகேசையாய் உமையாய்
நித்தில வடந்தாழ் முகிழ்முலைத் திருவாய்
நெரும்புகழ் வாணியாய் வேறாம்
எத்திறம் இறைவன் நின்றனன் அவனுக்கு
இயைதர அத்திறத் நின்று
மெத்திய உயிருன் மலஇருள் கெடுத்து
விளங்குபூ ரணியைஒத்த தெடுப்பாம்
***





# அமரர் கதிரிப்பிள்ளை பாலசிங்கம்

அமரர் பாலசிங்கம் உடுப்பிட்டியில் கதிரிப்பிள்ளை-மாணிக்கம் தம்பதிகளின் 4வது புத்திரனாக 1922ம் ஆண்டு வைகாசி மாதம் 24ம் திகதி அன்று பிறந்தார். இவருக்கு 6 ஆண் சகோதரங்களும், 3 பெண் சகோதரங்களும் இருந்துள்ளனர். இவர்களில் மூவர் பல வருடங்களுக்கு முன் இறந்துவிட்டனர். மற்ற மூவர் சென்ற சில வருடங்களுக்கு முன் இறந்துள்ளனர். இவர் தனது ஆரம்பகல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் ஆரம்பித்தார். பின்னர் சிலகாலம் உடுப்பிட்டி வைசப்பிரகாச வித்தியாசாலையிலும், பின்னர் நவிண்டில் தாமோதரம்பிள்ளை வித்தியாசாலையில் ஒன்பதாம் வகுப்பு (அந்தகாலத்தில் இப்பரீட்சையில் சித்தியடைந்தால் ஆசிரியகலாசாலை பிரவேசத்திற்கு தகுதி பெற்றவராகக் கருதப்படும்.) வரை கற்றார். இறுதிப்பரீட்சையில் இவர் ஒரு சில புள்ளிகளால் சித்தியடைய தவறியுள்ளார் இவருடைய அபிமான ஆசிரியர் மதுரைப் பண்டிதர் கந்தவனம் அவர்கள் அடுத்த முறையும் தேர்வில் அமருமாறு எவ்வளவோ பிரயத்தனம் செய்தும் அது நடக்கவில்லை அப்பொழுது இவரும், இவரின் சகோதரர் சிவக்கொழுந்து என்பவரும் இவர்களின் தாயின் சகோதரி திருமதி வாராத்தைப்பிள்ளை குமாரசுவாமியுடன் அவர்களின் பழைய விதானையார் வளவில் வளர்ந்து வந்தனர். இவரின் தந்தை சொந்த விளைநிலங்கள் உள்ள ஒரு முன்னோடி விவசாயியாக இவ்வூரில் திகழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. திரு. குமாரசுவாமி அவர்களுக்கும் வயல், தோட்டம், பனங்காணிகள் அதிகமாக இருந்ததாலும் உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்ற ஔவையார் வாக்குக்கு இணங்க இவர் தனது ஆசானின் வேண்டுகோளை அப்பொழுது நிராகரித்தாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. பிற்காலத்தில் இவர் ஒரு பிரபல விவசாயியாக திகழ்ந்தார். என்பது நாம் அறிந்த விடயம் இவர் இரண்டாம் தரம் பரீட்சைக்கு தோற்றியிருந்தால் ஆசிரியராக சிலசமயம் கடமையேற்றிருக்கலாம்.

அந்தக் காலத்திலே அதாவது அரை நூற்றாண்டிற்கு முன்பாக இவர்களின் தலைவாசலிலேயே அவ்வூர் வயோதிபர்களும், நடுத்தர வயதுள்ள சிலரும் சீட்டாடுவது (பணத்துக்காக அல்ல பொழுது போக்கிற்காக) வழக்கமாக இருந்தது. ஆனால் அமரர் பாலசிங்கமாமா இவ்விளையாட்டில் பங்கு கொள்வதில்லை தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளாகிய

யாடி, கிளித்தட்டு, கிட்டியடி, அம்பெறிதல், சித்திரவருடப்பிறப்புக்கு போர்த்தேங்காய் அடித்தல், தைப்பொங்கலுக்கு பட்டம் ஏற்றுதல் ஆகிய விளையாட்டுகளில் இவருடைய சகாக்களுடன் சேர்ந்து விளையாடுவார். இவருக்கு போர்த்தேங்காயை காலிநகரிலிருந்து சிலகாலம் இவருடைய பேரன் ஆறுமுகம் என்பவரும் பின்னர் இவருடைய மாமன் வேலுப்பிள்ளை அவர்களும் அனுப்பிவைப்பது வழக்கம் இவர் பட்டம் விடுவதில் பல வருடங்கள் முதலாவது இடத்தை தட்டிக் கொண்டுள்ளார். இதற்கு பாலசிங்கம் மாமாவின் சிவத்தநூல் பட்டம் பிரசித்தி பெற்றது. இந்நூலையும் இவருடைய தாய்மாமன் கொழும்பு டிஸ்றிக் கோர்ட்டில் மொழிபெயர்ப்பாளராகவிருந்த வேலுப்பிள்ளை அவர்களே வருடா வருடம் அனுப்பி வைப்பது வழக்கமாக இருந்தது.

பாலசிங்கம் மாமா 1960ம் ஆண்டு அல்வாய் ஊரை பிறப்பிடமாக கொண்ட கனகரட்னம் கமலினி என்பவரை திருமணம் செய்து கொண்டார். இல்லறமே நல்லறம் என்று வாழ்ந்து வரும் காலங்களில் இவர்கள் மூன்று ஆண் பிள்ளைகளுக்கும் நான்கு பெண் பிள்ளைகளுக்கும் தந்தையானார் பிள்ளைகள் எல்லோரும் நல்லநிலையில் இருக்கின்ற போதிலும் அடியேனும் இவரின் சகோதரியின் மகன் தவக்குமார் அவர்களும் பலதடவைகள் வேண்டுகோள் விடுத்த போதிலும், இவர்களில் ஒருவரையாகுதல் மேற்படிப்புக்காகவோ வேலைக்காகவோ மணவாழ்க்கைக்காகவோ வெளிநாட்டிற்கு அனுப்பிவைக்க மறுத்துவிட்டார். அவர்கள் ஊருடன் இருந்து அவர்களுடைய கல்விக் கேற்ற தொழிலும், அத்துடன் உள்ள காணி, பூமியையும் பார்த்து கோயில்களையும் கவனித்தால் போதுமென்று சொல்லுவார். பிள்ளைகளும் தந்தை சொற்படி நடக்கும் சுபாபமுள்ளவர்கள்.

இவர் தமிழ்பற்றுடன், சமயப்பற்றும் உடையர், தனது குல தெய்வமாகிய பண்டகைப் பிள்ளையாரிடம் மிகுந்த பற்றுள்ளவராக இருந்த பொழுதிலும், உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரர், கெருடகம்பதி வீரமாகாளிஅம்மன், செல்வச்சந்நிதி, வல்லை வைத்தீஸ்வரா, வல்லிபுர ஆழ்வார் ஆகிய தெய்வங்களையும் சென்று வழிபடுவது வழக்கமாக இருந்தது. தனது சுயமுயற்சியால் புராணங்களையும், இதிகாசங்களையும் கற்றதுடன் மற்றவர்களுக்கும் தெளிவுபட விளங்குவதில் ஆர்வமுடையவராக இருந்தார். இவருக்கு விநாயக புராணத்திலும், திருப்புகழிலும், அலாதியான பிரியமும், பாண்டித்தியமும் அவற்றைப் படிப்பதில் அளவற்ற தன்னிறைவும், அவரிடம் காணப்பட்டது.

உடுப்பிட்டி பண்டகைப்பிள்ளையார் முதலாவது மகாகும்பாபிஷேகம் 1974-07-11ல் நடைபெற்றது. அவ்வருடம் முதல் விநாயக சதுர்த்தியையும், விநாயக சஷ்டி விரதத்தையும் மேற்கொள்ளலானார். பெருங்கதை 21





நாளும் நோன்பிருந்து பாலசிங்கம் மாமா விநாயக புராணத்தை தினமும் 21 வருடம் ஒரு தடையோ, தொய்வோ இல்லாமல் படித்து விரதம் மேற்கொண்டார். விநாயகசதுர்த்தி, விநாயக விரதாரம்பநாள் இறுதிநாளாகிய பெருங்கதையும் இவருடைய உபயமே ஏனைய சில நாட்களில் உபயகாரர் இல்லாதிருப்பின். இவர் பால், இளநீர், காளாஞ்சி அர்ச்சனையுடன் அன்றைய பூசையை நிறைவேற்றிய சந்தர்ப்பங்கள் பல உண்டு. இப்போ எல்லா உபயங்களுக்கும் உபயகாரர் இருப்பது மனநிறைவைத் தருகிறது.

பண்டகைப் பிள்ளையார் கோவில் உற்சவமூர்த்தி மகாகும்பாபிஷேகம் 1993-01-29ல் நடைபெறமுன் 10 நாளும் அபிஷேகங்கள் நடைபெற்றுவந்தது. இதில் 9 வது அபிஷேகத்தை பாலசிங்கம்மாமா செய்துவந்தார். அடியேனுக்கு 10ம் நாள் அபிஷேகம் செய்யும் பாக்கியம் கிடைத்தது. 9ம் நாள் அபிஷேகத்திற்கு தனது சகோதரங்கள் மனமுவந்து பங்களித்ததை பாலசிங்கம்மாமா ஏற்றுக்கொண்டார். 1993ம் ஆண்டு உற்சவம் ஆரம்பித்த காலத்திலிருந்து தனது சகோதரங்களிடம் இது கதிரிப்பிள்ளையின் பிள்ளைகளின் உபயம், இதை நீங்கள் சகலரும் உணர்ந்து செயற்பட வேண்டும் என விநயமாக உணரவைத்தார். இதன் பிரகாரம் பாலசிங்கம் மாமாவை இவ்விழாவின் எசமானாக சகோதரங்கள் பிள்ளைகள் பெறாமக்கள் எல்லோரும் கர்த்தவாக வைத்து தேர்த்திருவிழாவை சிறப்பாக நடாத்தி பூரிப்படைவர்.

பாலசிங்கம் மாமா பண்டகைப் பிள்ளையாரில் மூன்று மகாகும்பாபிஷேகங்களை கண்டுகளித்து முக்கிய பங்காற்றியதுடன் 2002-06-06 நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தில் கர்த்தாவாக விளங்கினார். என்பது குறிப்பிடத்தக்கது. பாலசிங்கம்மாமா தான் சிவபதம் அடையும் போது தனது ஏழு பிள்ளைகளும் தம்மை சூழ இருந்தார்கள் என்பதை அறியும் போது அவர் மறைவிலும் ஆனந்தம் மிளிர்கிறது என்பதை உணர்கிறேன்.

சுபம்

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கலாநிதி இ.மகாலிங்கசிவம்**
**முன்னாள் மேலதிகப்பணிப்பாளர் (திட்டமிடல்)**
**நிதிதிட்டமிடல் அமைச்சு.**
**கொழும்பு.**
21-04-2005.

# பாலசிங்கம் இறையடி எய்திவிட்டார்.....

அன்பன் பாலசிங்கம் பண்டகை விநாயகப் பெருமான் ஆலய பரிபாலன சபையின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராகவும், மூத்தவராகவும் விநாயகப் பெருமானிடத்து நிறைந்த பக்தியுடையவராகவும் வாழ்ந்தார். ஆலயத்தில் விநாயகப் பெருமானின் விஷேட தினங்களாகிய விநாயகர் சதுர்த்தி, விநாயகர் ஷஷ்டி, தேர் திருவிழா போன்ற விஷேட உற்சவங்களை உபயமாக ஏற்றும் மிகவும் சிறப்பான முறையிலும் நடாத்தி வந்தவர், ஆலய கிரியைகளையும் விரதங்களையும் ஆகம நெறிப்படி செய்வதில் சிரத்தையுள்ள ஒரு மனிதர் புராண நூல்களை ஆராய்ந்து அதன் பொருட்டு விரதங்களை அனுட்டித்து வரும் பழக்கமுடையவர் அவர் தான் அனுட்டித்து வந்த விநாயகர் சதுர்த்தி விநாயகர் ஷஷ்டி போன்ற விரதங்களை முறையாக விதிப்படி அனுட்டித்து உத்தியாவாகனம் செய்து விதிப்படி நிறைவு செய்து அவ்விசயங்களை தனது பிள்ளைகளிடம் ஒப்புவித்து விட்டு தனது இறைபணியில் நிறைவு கண்டவர். மேற்படி ஆலயத்தில் எக் கைங்கரியங்களிலும் பங்குபற்றுவதும், அவர் மூத்தவராதலாலும் ஆலய நற்காரிங்களை அவரை முன்வைத்தே ஊர் மக்கள் செய்வதும் அவர் செய்தவிடயங்கள் ஆலயத்தில் செழிப்புடன் நடை பெறுவதும் காணக்கூடியதாக விளங்கியது. இந்தவகையிலே நான் தலைமையேற்று நடாத்திய 06.06.2002 வைகாசித் திங்கள் நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தின் கர்த்தாவாக நியமிக்கப்பட்டு நடாத்திவைத்ததும் அவர் அப் பெருமானின் பணியின் சிறப்பம்சமே போலும்.

அன்னாரது ஆன்மா சாந்தி பெற இறைவனை பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இவ்வண்ணம்
**சிவஸ்ரீ வே. கனகசபைக் குருக்கள்**
**கரணவாய் ஆதீனம்**
**(பிரதம குருக்கள் கரவெட்டி வெல்லன் விநாயகர் தேவஸ்தானம்)**






# பாலசிங்கஜயாவே.....

உருவில் குறுமுனி உளத்தில் மலைப்பனி
உருகி யன்பினில் உளலும் சிவப்பணி
பெருகிப் பண்டகைப் பிள்ளையார் பலகணி
தரும் காற்றுச் சுவாசக் கருத்தொளி
அருகும் அடியவர் அணைப்பின் சிவமணி
பருகும் செவ்விள நீராய்க் கோடையில்
இருந்த எந்நிதயப் பாலசிங்கமையாவை இனி
வருந்தியழைத்தாலும் வாராரே கைலை விட்டு.

இவ்வண்ணம்
**அன்பு வ.ஆ.த**

# தேற்றம்

தோற்றமெல்லாம் மறையும் மாறு மென்றும் கண்டும்
மாற்றம் கொள்ளும் மானுடம் உணர்வால் ஏற்றம் கொண்டு
சாற்றும் கதை கவிதையாய் போன கலங்கரை விளக்கைக் கொண்டு
போற்றும்படி யிட்டுண்டு இருவினையொப்பாய்யிரு கலங்கலீர்.





உ

சிவமயம்

# விநாயக அகவல்

## வரலாறு

சுந்தரமூர்த்தி நாயனாருடன் கைலாயத்துக்குப் பரமசிவனுடைய சன்னிதானத்தில் ஆதியுலா அரற்கேற்ற எழுந்தருளுகின்ற சேரமான் பெருமாணாயனார் "ஔவையாரை அழையாமல் வந்து விட்டோமே" என்று நினைத்தார். அது விநாயகரைப் பூசித்துக் கொண்டிருந்த ஔவையாருக்குத் தெரிந்து தானும் அவர்களுடனே கூடக் கைலாயத்துக்குப் போகவேண்டு மென்கிற விருப்பங்கொண்டு துரிதமாகப் பூசை செய்தாள். விநாயகர், "ஔவையே! நீ சாவதானமாகப் பூசை செய்: நீ அவர்களுக்கு முன்னதாகவே போய்ச் சேரும்படி செய்கிறேன்" என்றார் அப்படியே அவள் துரிதமில்லாமற் பூசை செய்து இந்த அகவலைத்தோத்திரமாகப் பாடினாள். அப்போது விநாயகர் தாம் சொன்னபடி ஔவையாரைக் கைலாயத்திற் சேர்த்தார்.

பின்பு வந்த சேரமான் பெருமாணாயரைப்பார்த்து ஔவையார் சொன்ன கட்டளைக்கலித்துறை:

மதுரமொழி நல்லுமையாள்
புதல்வன் மலர்ப் பதத்தை
முதிர நினைய வல்லார்க்கரிதோ
முகின்போன் முழங்கி
யதிர நடந்திடும் யானையுந் தேரு
மதன்பின் வருங்
குதிரையுங்காதங் கிழவியுங்காதங்
குல மன்னனே.







உ

கணபதி துணை.

## விநாயர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்டநீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொழி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தல மொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே

இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் மூட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்ஷமமும்
எண்முக மாகஇனி தெனக்கு அருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி யென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

விநாயகர் அகவல் முற்றிற்று.







உ
கணபதி துணை.

# விநாயகர் கவசம்.

## வரலாறு.

ஆதியில் இக்கவசத்தைக் காசிப முனிவர் முற்கல முனிவருக்கு அருளிச் செய்ய, அவர் மாண்டவிய முனிவருக்கு அநுக்கிரகிக்க, அவர் மரீசி முனிவருக்கு உபதேசித்தருள, அவர் பல் முனிவர்களுக்குத் திருவாய் மலர்ந்தருளிச் செய்தன ரென்றறிக.

நிந்திய கருமங்களை முடித்துப் பரிசுத்தமாகிய ஓரிடத்தில் இருந்துகொண்டு, ஒன்றுபட்ட மனதுடனே விநாயகரைத் தியானித்து இதைச் செபிக்க வேண்டும்.

பத்தியுடனே இந்தக் கவசத்தைப் பாராயணஞ் செய்பவர்களுக்குப் பிணியும், வறுமையும், பேய் பூதங்களா லுண்டாகின்ற பல துன்பங்களும், கவலைகளும், பாவ முதலியவைகளும் நீங்கும், அன்றியும், பெருஞ்செல்வமும், தீர்க்காயுளும், களத்திர புத்திர மித்திராதிகளும் உண்டாகும். அன்றியும் யாத்திரையிலே இதைச் செபித்தால் சகல விக்கினமும் போய்ப் பயன்களெல்லாம் கை கூடும். யுத்தத்திலே இதனைச் சொன்னால் சய முண்டாகும். இருபத்தொரு நாள் நாளொன்றுக்கு ஏழு முறை தோத்திரங் செய்தால், மரணநீங்குவதன்றி உச்சாடனம், ஆகருஷணம் ஸ்தம்பன முதலியவைகள் பயனுறும். இருபத்தொருநாள் நித்தியம் இருபத்தொரு தரம் ஜெபித்தால், சிறையுருப்பு விடுதலையாவதுமன்றி, அரசருடைய நீஷ்டூரமும் நீங்கும் அரசனைக் காணப்போகும் போது பத்தியினால் மூன்று தரம் இதை ஓதினால் அவன் வசப்படுவான். இதைப் படித்தாலும், ஒருவர் சொல்லக் கேட்டாலும், பூசித்தாலும் எப்படிப்பட்ட துன்பதுமும் நீங்கும்.



உ

கணபதி துணை.

# விநாயக கவசம்.

வளர்ச்சிகையைப் பாரபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக
மதோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வின்மகோ தார்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க

கவின்வளரு மதாங்கச் முகர்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்புகங் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாங் காக்க
வவிர்நகைதுன் முகர்காக் வள்ளெழிற்
செஞ்செவி பாசபாணி காக்க
தவர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்த தார்த்தர் காக்க

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்களங் கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தா மகிழ்ந்து காக்க
வேமமுறு மணிமுலைவிக் கினவினா
சன்காக்க விதயந் தன்னைத்
தோமகலுந் கணநாதர் காக்கவகட்
டினைத்துல்கே ரம்பர் காக்க





பக்கமிரண் டையுந்தரா தார்க்காக்க
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினக் ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்ல
லுக்ககண பன்காக்க வூருவைமங்
களமூர்த்தி யுவந்து காக்க

தாழ்முழந்தாண் மகாபுத்தி காக்கவிரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்வையை வணங்கு வார்நோ
யாழ்தரச் செய் யாசாபூ ரகர்காக்க
விரல்பதும வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யதர்காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க

அக்கினியிற் சித்தீசர் காக்கவுமா
புத்திரர்தென் னாசை காக்க
மிக்கநிரு தியிற்கணே கரர்காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்வா யுவிற்கசகன்
னனகாக்க திகழு தீசி
தக்கசிதி பன்காக்க வடகிழக்கி
லீசநந் தனரே காக்க

ஏகநந்தர் பகன்முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டு
மோகையின்விக் கினகிருது காக்கவிராக்
கதர்பூத முறுவே தாள
மோகினிபே யிவையாதி யுயிர்த் திறத்தால்
வருந்துயரு முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க

மதிஞான தவர்ந்தான மானமொளி
புகழ்குலம்வண் சரீர முற்றும்
பதிவாண தனந்தானி யங்கிரக
மனைவிமைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமுன் னான
ரெஞ்ஞானறும் விரும்பிக் காக்க

வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
வென்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடினும்பா லிடையூ றென்று
மொன்றுறா முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதி னாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்.

**விநாயக கவசம் முற்றிற்று.**





## போற்றித்திருவகவல்.

அருள்புரிந்திருளுமரசே போற்றி
யிருவினைதுடைக்குமிறைவா போற்றி
மறைமுனியொருவன் மாங்கனி கொணர்ந்து
கறைமிடற்றிறைவன் கையிற்கொடுப்ப
வேலனுநீயும் விரும்பிமுன்னிற்ப
வொருநொடியகதனி லுலகெலாம் வலமாய்
வருமவர்கமக்கு வழங்குவோம்யாமென
விரைவுடன்மயின்மிசை வேலோன்வருமுன்
ரரனைவலமவந் தக்கனிவாங்கிய
விரகுளவிக்கின விநாயகபோற்றி
முன்னடிதெரியா முதல்வனைப்போற்றிப்
பின்னடிதெரியாப் பெருங்கவிப்பெருமான்
மண்மிசைவைத்துனை வாவியிற்செல்லக்
கண்ணிலானிவனெனக் கரந்தவன்போக்க்
கரைமிசையேறிக் காணாதிரங்கி
யுரைதடுமாறி யுள்ளங்கலங்கி
கூகூகணபதி கூகூவென்னக்
கூகூவென்றருள் குன்றேபோற்றி
யப்பணிசடையோன் முப்புரமெரிக்க
விப்புவியதனை யிரதமாக்கித்
தினகரன்மதிதேர்ச் சில்லியாகப்
பெர்ருவருமறைகளே புரவியாகச
சங்கைசேர்நான்முகன் சாரதியாகப்
பங்கயக்கண்ணன் பகழியாக
மலைசிலையாக வாசுகிநாணா
நிலைபெறநிற்கு நெடுந்தேர்தன்னில்
விக்கினந்தீர்க்கும் விநாயகநமவெனச்
சிக்கெனவிறைவன் செப்பாதேறலிற்
றச்சுறச்சமைத்த தகைமணிநெடுத்தே
ரச்சறுத்தருளு மரசேபோற்றி

வேதப்பொருளாம் விமலாபோற்றி
பூதப்படையுடைப் புனிதாபோற்றி
கரமைந்துடைய களியேபோற்றி
பரமன்பயந்த பாலாபோற்றி
யகிலமீன்றரு ளம்மைதனக்குத்
திருமகனாகிய செல்வாபோற்றி
யற்றவர்க்கருள்புரி யரசேபோற்றி
கற்றவர்மனதிற் காண்பாய்போற்றி
பாசாங்குசங்கை பரித்தாய்போற்றி
தேசார்மணிமுடித் தேவேபோற்றி
யெழுநரகெழுபிறப் பறுப்பாய்போற்றி
யெழுமையுமெமக்கங் கிரங்குவாய்போற்றி
துளைசெறிவக்கிர துண்டாபோற்றி
வளறிகரொற்றை மருப்பாபோற்றி
வரமிகுமரிதிரு மருகாபோற்றி
சுரர்தொழுமுருகன் துணைவாபோற்றி
நல்லவர்புகழு நம்பாபோற்றி
வல்லபைக்குரிய மணாளாபோற்றி
கயமுகத்தவுணனைக் காய்ந்தாய்போற்றி
வயமிகுமூஷிக வாகனாபோற்றி
யோங்காரத்தனி யுருவேபோற்றி
நீங்காக்கருணை நிமலாபோற்றி
துறவர்தமக்கொரு துணைவாபோற்றி
முறநிகர்தழைசெவி முதல்வாபோற்றி
துண்டமாமதிபோற றுலங்கிய கோட்டைக்
கண்டகமாகக் கைதனிற்பிடித்துப்
பண்டுபாரதப் பழங்கதைபசும்பொன்
விண்டுவில்வரைந்த விமலாபோற்றி
போற்றி போற்றியுன் பொற்பதம்போற்றி
***





## வருக்கக்கோவை.

அன்புடைக்கடவுளர்க் கதிபதிசெயசெய
ஆபத்தகற்று மைங்கரசெயசெய
இந்துச்சடைமுடி யிறைவாசெயசெய
ஈசன்பெற்ற எம்மான்செயசெய
உன்னியமுடிக்கு மொருவாசெயசெய
ஊர்மனைசந்தி ஒருவாசெயசெய
எம்பெருமானே யேகனேசெயசெய
ஏழுலகுந்தொழ விருப்பாய்செயசெய
ஐயாகணங்கட் காதீசெயசெய
ஒற்றைமருப்பை யுடையாய்செயசெய
ஓங்கியகரிமுக முற்றாய்செயசெய
ஔவியமில்லா தவனேசெயசெய
அ.்.ரவணிந்த வாதீசெயசெய
கண்முன்றுடைய களிறேசெயசெய
ஙப்போன்மழுவொன் றேந்தீசெயசெய
சங்கரன்றேரச் சறுத்தாய்செயசெய
ஞயமுடைவித்தக நம்பீசெயசெய
இ,டமுடைவிக்கி னேசுராசெயசெய
இ,ணங்கியவன்பர்க் கினியாய்செயசெய
தத்துவமுறைதரு சாமீசெயசெய
நன்னெறிவித்தக நம்பீசெயசெய
பகீரதிக்கினிய பாலாசெயசெய
மன்றுளாடி மகனேசெயசெய
இ,யக்கரைக்களையு மிறைவாசெயசெய
அ,ரவக்கிங்கிணி யணிவாய்செயசெய
இ,லகக்கொம்பொன் றேந்தீசெய செய
வஞ்சனப்பழவினை மாற்றுவாய்செயசெய
அ,ழகியவேலுக் கண்ணாசெயசெய
இ,ளமதயானை முகத்தாய்செயசெய
இ,றக்கரி,சாடுமிறைவாசெயசெய
அ,ணந்தலாடு மரசேசெயசெய
கரமைந்துடைய கணபதிசெயசெய
காமன்பகைவன் காதல்செயசெய

கிரியிற்பாரதந் தீட்டினாய்செயசெய
கீழ்மையொழித்துக் கிளர்வாய்செயசெய
குண்டப்பண்டிக் குருவேசெயசெய
கூறியமும்மதக் கோவேசெயசெய
கெண்டையங்கண்ணுமை மகனேசெயசெய
கேதாரப்பிரிய மானாய்செயசெய
கையிற்சக்கர முடையாய்செயசெய
கொவ்வைக்கனிவாய் மதலாய்செயசெய
கோலக்குடநிகர் வயிற்றாய்செயசெய
கௌவைப்பழவினை தீர்ப்பாய்செயசெய

***

## கணபதி பொற்சரணஞ் சரணமடைகின்றோம்

கிழே தரப்பட்டுள்ள எட்டுப்பாடல்களும், தோத்திரராட்டகம், என வழங்கப்படுகின்றது. இவற்றை மூன்று நாட்கள் முப்பொழுதும் ஓதினோர் எல்லாப் பேறுகளையும் பெறுவர், எட்டு நாட்கள் ஓதினோர் சதுர்த்தியன்று எட்டு முறை ஓதினோரும் அட்டமா சித்திகளைப் பெறுவர். நாள்தோறும் பத்து முறையாக இரண்டு மாதம் ஓதினோருக்கு அரசர் வசியமாவர்: அவ்வாறு இருபத்தொரு முறை ஓதினோர் மக்கட்பேறு, கல்வி, செல்வம் முதலிய எல்லா நலன்களையும் அடைவர் என விநாயக பராணத்தில் காசிபர் முதலியோர் அதுட்டித்த படலத்தில் கூறப்பட்டுள்ளது.

பந்து மகற்றும் அனந்தகுணப் பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி இருந்து சுரக்குமோ
சந்த மறைஆ கமங்கள் அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாங் கணபதியை அன்பு கூர்ந் தொழுகின்றாம். 01

உலக முழுதும் நீக்கமற ஒன்றாய் நிற்கும் பொருள்எவன், அவ்
வுலகிற் பிறங்கும் விகாரங்கள் உறாத மேலாம் ஒளியாவான்
உலகம் புரியும் வினைப்பயனை ஊட்டுங் களைகண் எவன், அந்த
உலக முதலைக் கணபதியை உவந்து சரண மடைகின்றாம். 02





இடர்கள் முழுதும் எவனருளால் ஏரினீழும்பங் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால் சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக் கருமம் எவனால் முடிவுறும், அத்
தடவு மருப்புக் கணபதிபொற் சரண்ஞ் சரண மடைகின்றாம். 03

மூர்த்தி யாகித், தலமாகி, முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி, அறிந்தறியாத் திறத்தினாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி, நாளும் அறியாமை அகற்றி அறிவிப் பான்எவன், அப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து சரண மடைகின்றாம். 04

செய்யும் வினையின் முதல்யாவன், செய்யப் படும்ப பொருள் யானன்
ஐயமின்றி உளதாகும் அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன்வினைவின் ஊட்டிவிடுப்பான் எவன், அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப் புரிந்து சரண மடைகின்றாம் 05

வேதம் அனந்தும் அறிவரிய விகிர்தன் யாவன், விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும் விமலன் யாவன், விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும் நாதன் எவன், எண் குணன் எவன், அப்
போத முதலைக் கணபதியைப் புகழ்ந்து சரண மடைகின்றாம். 06

மன்னின் ஓர்ஐங் குணமாகி வதிவான் எவன், நீ ரிடைநாதன்காய்
நண்ணி அமர்வான் எவன், தீயின் மூன்றாய் நவில்வான் எவன், வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி இயைவான் எவன், வானிடை ஒன்றாம்
அண்ணல் எவன்அக் கணபதியை அன்பிற் சரணமடைகின்றாம் 07

பாச அறிவிற் பசுஅறிவிற் பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும் பயிலப் பணிக்கு மவன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும் பாற்றி மேலாம் அறிவான்
தேசன் எவன்அக் கணபதியைத் திகழ்ச் சரண மடைகின்றாம். 08

ஓம் பூர் புவஸ்வக
தத் ஸ்வீதுர் வரேன்யம்
பர்கோ வேஸ்ய தீமஹி
தியோ யோஞப் பிரசோதயாத்

# தெரிந்து கொள்ளுங்கள்

பஞ்சாட்சரம் :- நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரம்.

பஞ்சகிருத்தியம் :- படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற இறைவனின் ஐந்தொழில்கள்.

பஞ்சபூதங்கள் :- நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் பிரபஞ்சத்தின் ஐந்து கூறுகள் (ஐம்பூதங்கள்)

பஞ்சாங்கம் :- கரணம், திதி, நட்சத்திரம், யோகம், வாரம் என்ற ஐந்து உறுப்புக்களைக் கூறும் காலக் குறிப்பு

பஞ்சகவ்வியம் :- பசுவின் பால், தயிர், நெய், சிறுநீர், சாணம் ஆகியவை

பஞ்சகருவி :- தோல், துளை, நரம்பு, கஞ்சம்(வெண்கலம்), மிடறு (குரல்வளை) என்னும் ஐந்து வகை வாத்தியங்கள்

பஞ்சபூதத்தலங்கள் :- காஞ்சி மண் (பிருதிவி) இலிங்கம்
திருவானைக்கா - அப்பு (நீர்) இலிங்கம்
திருவண்ணாமலை - தேயு (தீ) இலிங்கம்
திருக்காளத்தி - வாயு (காற்று) இலிங்கம்
சிதம்பரம் - ஆகாய இலிங்கம்

பஞ்சமாபாதகங்கள் :- கொலை, பொய், களவு, கள்ளருந்தல், குரு நிந்தை

பஞ்சசபைகள் :- இரத்தினசபை - திருவாலங்காடு
கனகசபை - சிதம்பரம்
வெள்ளிச் சபை - மதுரை
தாமிரசபை - திருநெல்வேலி
சித்திரசபை - திருக்குற்றாலம்

பஞ்சசுத்தி :- ஆன்மசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்னும் ஐந்து வகைத் தூய்மைகள்





பஞ்சதருக்கள் :- சந்தனம், தேவாரம், கற்பகம், மந்தாரம், பாரிசாதம் எனும் ஐந்து வகைத் தருக்கர் (மரங்கள்)

பஞ்சலோகங்கள் :- பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என்னும் ஐந்து உலோகங்கள் (ஐம்பொன்)

ஐம்பொறிகள் :- மெய், வாய், கண், மூக்கு, செவி

ஐம்புலன்கள் :- சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

சப்த நதிகள் :- கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதா, காவேரி, சிந்து, கோதாவரி என்னும் சப்த (ஏழு) நதிகள்.

சப்த ரிஷிகள் :- அத்திரியர், ஆங்கீரசர், கௌதமர், ஜமதக்கின், பரத்துவாசர், வசிட்டர், விசுவாமித்திரர் அல்லது அகஸ்தியர், புலஸ்தியர், அங்கீரசு, கௌதமர், வசிட்டர், காசீபர், மார்க்கண்டர் எனும் ஏழு முனிவர்கள்.

சப்த மாதர்கள் :- அபிராமி, மகேஸ்வரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி.

சப்த தலங்கள் :- அயோத்தி, மதுரை, மாயா, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை.

ஏழு பிறப்பு :- தேவர், மக்கள், விலங்கு, பறவை,ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்.

நவசக்தி :- வாமை, யேஷ்டை, ரௌத்திரி, காளி, பலவிகரனி, பலபிரமதனி, சர்வபூசனி, சக்தி, மனோன்மணி ஆகிய சிவசக்திகள்.

நவதானியம் :- உழுந்து, நெல், எள்ளு, கடலை, கொள்ளு, கோதுமை, அவரை, பயறு, துவரை என்னும் ஒன்பது தானியங்கள்.

நவத்துவாரம் :- கண்கள், காதுகள், மூக்குத்துளைகள், வாய், மலத்துளை, நீர்த்துளை, என்னும் மனித உடம்பிலுள்ள ஒன்பது வாயில்கள்.

நவக்கிரகங்கள் :- ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது, என்னும் ஒன்பது கோள்கள்.

நவதீர்த்தங்கள் :- கங்கை, யமுனை, சரசுவதி, நர்மதா, சிந்து, காவேரி, கோதாவரி, சோணை (யாறு) துங்கபத்திரா என்னும் ஒன்பது புண்ணிய தீர்த்தங்கள்.

நவநிதிகள் :- பதுமம், பரபதுமம், சங்கம், மகரம், கச்சபம், முகுந்தம், நந்தம், நீலம், கர்வம், எனும் ஒன்பது வகை குரோநிதியங்கள்

நவமணிகள் :- கோமேதகம், நீலம், பவளம், மாணிக்கம், முத்து, புஷ்பராகம், வைடூரியம், வைரம், மரகதம் ஆகிய ஒன்பது வகை மணிகள்

நவலோகங்கள் :- பொன், இரும்பு, செம்பு, ஈயம், வெள்ளி, பித்தளை, தரா(சங்கு) துத்தநாகம், வெண்கலம்.

நவவீரர்கள் :- வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரன், வீரமகேச்சுரன், வீரபுரந்தரன், வீரமார்த் தாண்டன், வீரராட்சதன், வீரராந்தகன், வீரதீரன் எனும் முருகக்கடவுளின் தூதர்கள் ஒன்பது பேர்.

நவரசங்கள் :- நகை (சிரிப்பு), அழுகை, இகழ்வு, மருட்கை, அச்சம் (பயம்) பெருமிதம், வெகுளி (கோபம்), உவகை (சந்தோஷம்), அமைதி ஆகிய ஒன்பது வகை

இருநிதி :- சங்கநிதி, பதுமநிதி

பதினான்கு உலகம் :- மேலுலகம் (7)
பூலோகம்,புவலோகம்,சுவலோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம்,
கீழுலகம் (7)
அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதாளம்.

அட்டதிக்குக் காவலர் (எட்டுத்திக்குக் காவலர்)
இந்திரன் - கிழக்குத்திசை
அக்கினி - தென்கிழக்குத்திசை
யமன் - தென்திசை





நிருதி - தென்மேற்குத் திசை
வருணன் - மேற்குத் திசை
வாயு - வடமேற்குத்திசை
குபேரன் - வடதிசை
ஈசானன் - வடகீழ்த்திசை

அட்டகிரிகள் :- (எட்டு மலைகள்)
இமயம், மந்தரம், கயிலை, விந்தம், நிடதம், ஏமகடம், நீலம், கந்தமாதனம்.

எட்டுவகை யோகநிலை :- இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி.

எண்வகைச் சித்தி :- (அட்டமாசித்தி)
அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்.

அட்ட ஐசுவரியம் :- இராசாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை.

தசதானம் :- (பத்து தானங்கள்)
உப்பு, எள், நெய், நெல், பசு, பூமி, பொன், ஆடை, செல்லம், வெள்ளி.

பதினாறுவகைப் பேறுகள் :- புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பொறுமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள்.

புறச்சமயங்கள் :- தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம்.



# பஞ்சாச்சர செபம்

தியானிக்கும் பொருளை எதிர்முகமாகும் பொருட்டு அதனை உணர்த்தும் மந்திரத்தினை உச்சரித்தல் செபம் எனப்படும். மந்திரம் என்பதற்கு நினைப்பவனைக் காப்பது எனப் பொருள்படும். (மந் - நினைப்பவன், திர - காப்பது)

ஸ்ரீ பஞ்சாட்சரம் எனப்படும் திருவைந்தெழுத்து சைவர்களாலே நியமமாகச் செபிக்கப்பட வேண்டிய சிவமூலமந்திரமாகும். திருவைந்தெழுத்தைக் குருமுகமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். மதுபானமும் மாமிசபோசகனமும் இல்லாதவராய் ஆசாரமுடையவராய் சிவதீட்சை பெற்றவராய் உள்ளோரே திருவைந்தெழுத்தோத யோக்கியதை உடையவர்கள்.

ஒரு சமயத்தில் திருவைந்தெழுத்தை நூற்றெட்டு உருவாயினும் பத்து உருவாயினும் நியமமாகச் செபித்தல் வேண்டும். உரு எண்ணுவதற்கு செபமாலையை அல்லது வலக்கை விரலிறையை உபயோகிக்கலாம்.

உருத்திராக்க மணியாலான செபமாலையே உத்தமம், இல்வாழ்வான் 27, 54 அல்லது 108 மணிகளையுடைய செபமாலையை உபயோகித்தல் வேண்டும். துறவி 25 மணியாலான மாலையை உபயோகிக்கலாம்.

வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் மரப்பலகை, வஸ்திரம், கம்பளம், மான்தோல், புலித்தோல், தருப்பை என்னும் ஆசனங்களுள் இயன்ற தொன்றிலே முழந்தாள் இரண்டையும் மடக்கி, காலோடு காலை அடக்கி, இடத் தொடையினுள்ளே வலப்புறங்காலை வைத்து இரண்டு கண்களும் மூக்கு நுனியைப் பொருந்த நிமிர்ந்திருந்து கொண்டு திருவைந்தெழுத்தைச் செபித்தல் வேண்டும்.





மனத்தினாலே செபித்தல், 'மானசம்', எனவும் தன் செவிக்கு மட்டும் கேட்கும்படி செபித்தல், 'மந்தம்', எனவும், அருகிலிருந்தும் பிறர் செவிக்குக் கேட்கும்படி செபித்தல் 'வாசகம்' எனவும் அழைக்கப்படும். மானசமே சிறந்தது. மந்தம் வாசகத்தை விடச் சிறந்தது.

பிறர் கண்ணுக்குப் புலப்படாவண்ணம் பரிவட்டத் (சால்வைத்துண்டு) தினால் மூடப்பட்ட செபமாலையை வாசகமாக செபிக்கின் சுட்டு விரலிலும், மந்திரமாகச் செபிக்கின் நடுவிரலிலும், மானசமாகச் செபிக்கின் மோதிர விரலும் வைத்து சிவபெருமானுடைய திருவடிகளை மனசிலே தியானித்துக்கொண்டு பெருவிரலினாலே நாயகமணிக்கு அடுத்தமுகம் மேல்நோக்கிய மணியை முதலாவதாகத் தொட்டு ஒவ்வொரு மணியாகப் போகத்தின் பொருட்டுக் கீழ்நோக்கித் தள்ளியும் முத்தியின் பொருட்டு மேல்நோக்கித் தள்ளியும் செபித்து பின்பு நாயகமணி வைக்கட்டதாயின் அதனைக் கடவாது திரும்ப மறித்து வாங்கி அதனைத் திரும்பக் கையில் ஏறிட்டுச் செபித்தல் வேண்டும். செபிக்கும் போது செபமாலையின் மணிகள் ஒன்றோடொன்று ஓசைப்படக்கூடாது.

திருவைந்தெழுத்தின் பொருளை அறிந்து சிவபெருமானை ஆண்டவனாகவும் தன்னை அடிமையாகவும் கொள்ளும் மனப்பக்குவத்தோடு திருவைந்தெழுத்தை விதிப்படி மெய்யன்போடு செபித்துக் கொண்டுவரின், ஆன்மாவிடத்தே சிவன் பிரகாசித்து, மும்மலங்களும் நீங்கி பேரின்பபேறுகிட்டும்.

(ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் செய்த இரண்டாம் சைவவினா விடையிலிருந்து தொகுக்கப்பட்டது)

**கடவுள் வாழ்த்து**

அகர முதல எழுத்துஎல்லாம் ஆதி
பகவன் முதற்கே உலகு

கற்றதனால் ஆய பயன்என்கொல் வால்அறிவன்
நற்தாள் தொழாஆர் எனின்.

# திருச்சிற்றம்பலம்.

‘திருச்சிற்றம்பலம்’ என்பது உலகத்தில் வெளிப்புறத்தில் நடு இடமாகிய சிதம்பரத்தைக் குறிப்பிடுவது போல உடம்பின் உட்புறத்தில் நடு இடமாகிய இதயத்தையும் அதோடு தொடர்புடைய நடுநாடியையும் குறிப்பிடுகின்றது. எனவே திருச்சிற்றம்பலம் என்று உணர்ந்து சொல்லும் போது நாம் உணர்வு இதயம், நடுநாடி, அதன் வழியே மூளை ஆகிய இடங்களுக்குப் போய்ச் செழுமை பெறுகின்றது. அதன் பயனாக நன்கு பாடவும் பாடியதை மேன்மேல் உணரவும் முடிகிறது. என்வே திருச்சிற்றம்பலம் என்று சொல்லி உணர்ச்சியை ஒருமுகப்படுத்திக் கொண்டும் செழுமையாக்கிக் கொண்டு பதிகத்தை தொடங்க வேண்டும்.

திருச்சிற்றம்பலம் என்பது திருவருள் வெளி ஆதலின் அதனைச் செல்லுதலும் நினைத்தலும் தமிழ் மறைகள். அந்த அருள் வெளியினின்றும் தோன்றிய அருளொலிகள் என்னும் உணர்வை நிலைபெறுத்துவனவாகும்.

திருச்சிற்றம்பலம் திருமுறைகளைப் பேணிப் பாதுகாத்துத்தந்த திவ்விய சந்நிதி ஆதலாலும் முயற்சி இல்லாமலேயே மனம் ஒடுங்கும் இடமாதலாலும் ‘திருச்சிற்றம்பலம்’ எனத் திருமுறைப் பாராயன முதலிலும் முடிவிலும் கூறும் முறை பேணப்படுகின்றது.

- ஆழகரடிகள்-







# மகா சிவராத்திரி விரதம்

இவ் விரதம் சிவ விரதங்களுள் மிக முக்கியமான தொன்றாகும். மாசி மாதத்து அபரபக்க மகா சிவராத்திரி எனவும் மாசி மாதத்தில் வருங் காரணத்தால் மகா சிவராத்திரி எனவும் கூறப்படும்

இவ்விரத நிர்ணயத்தையும் சிவனுக்கு பூஜை செய்ய வேண்டிய முறையும் சூரியன் அஸ்தமிக்கும் வரை திரயோதசி திதி நின்று பின்பு சதுர்த்தசி கூடி மறுநாட் பகல் முழுவதும் நிற்குமாயின் அது உத்தமோத்தம சிவராத்திரியாகும். சூரியன் அத்தமித்த பின் சதுர்த்தரி கூட்டினால் அதை உத்தம சிவராத்திரி என்பர்.

உதயற் தொட்டு மற்றைநாள் உதயம் வரை பகலும் இரவும் பொருந்தியிருக்கும் சதுர்த்தசியும் சூரியன் அஸ்தமிக்குமுன் கூடுகின்ற சதுர்த்தசியும் இரவில் பத்து நாழிகைக்கு மேல் வந்து கூடும் சதுர்த்தசியும் மத்திம சிவராத்தியாகும்.

இரவில் இருபது நாழிகை வரை சதுர்த்தசி நின்று அதன் பின் அமாவாசை கூடுமாயின் அதை அதம சிவராத்திரி என்பர்.

இரவில் பிதின் மூன்றாம் திதியாகிய திரயோதசித் திதியோடு பொருந்தப் பெறும் சதுர்த்தசித் ததியே நன்மையுடையது இரவில் திரயோதசியோடு சதுர்த்தசி ஒரு கலையளவு கூடினாதும் அத்தினமே சிவராத்திரி தினமாகக் கொள்ளப்பட வேண்டுமென்பர்.

“சதுர்த்தசித்திதி சிவரூபம் எனவும் திரயோதசித்திதி சத்திரூபமெனவும் இவ்விரண்டு திதிகளும் கூடுகின்ற இரா சிவலிங்க வடிவடுடையது எனவும் கூறப்படுகிறது.

சிவராத்திரி நோன்பு நோற்போர் முதல்னாகிய திரயோதசியில் ஒரு பொழுதுண்டு மற்றை நாளாகிய சிவராத்திரி தினத்தில் வைகறையில் துயிலெழுந்து புண்ணிய தீர்த்தத்தில் நீராடி சூரியன் உதிக்கும் பொழுது செய்ய வேண்டிய காலைக் கடன்களை கழித்து திருக்கோயிலை வலம் வந்து வணங்கி, நண்பகலிலும் நீராடி மத்தியானத்திற் செய்ய வேண்டிய கிரியைகளை முடித்து சிவனுக்குப் பூசை செய்யுமிடத்தைக் கழுவி, மேற்கட்டி கட்டி, வாழை, கமுகு, கரும்பு முதலியவற்றை நாட்டி மாவிலை, தோரணம் பூமாலை முதலியவை தூக்கி சிவபூசைக்கு வேண்டிய திரவியங்கள் அனைத்தையும் தேடிக் கோயிலுக்குக் கொண்டு போய்ச் சேர்த்து அதன் பின்பும் நீராடி

மாலைக் கடன் கழித்து சிவபெருமானை பீடத்தில் தாபித்து, புலனடக்கி வேதாகம விதிப்படி பூசை செய்தல் வேண்டும்.

முற்கான்னம் - பருப்புச் சேர்த்த அன்னம்

பஞ்சகவ்வியம்: கோமயம், கோசலம், தயிர், பால், நெய என்பன

இரண்டாஞ் சாமத்தில் பஞ்சாமிர்தத்தால் அபிடேகஞ் செய்து அகிற் சந்தனம் சாத்தி தாமரை மலரால் அலங்காரஞ் செய்து பாயசம் அல்லது பாலன்னம் நிவேதித்துத் துளசியால் அர்ச்சனை செய்ய வேண்டும்.

பஞ்சாமிர்தம்: தேன், சர்க்கரை அல்லது கருப்பஞ்சாறு, பால், தயிர், நெய் என்பன. இவற்றைத் தனித்தனியாக வைத்து அபிடேகஞ் செய்ய வேண்டும் மென்பர்.

முன்றாஞ் சாமத்தில் தேனால் அபிடேகஞ் செய்து பச்சைக் கருப்பூரஞ் சாத்தி சிறுசண்பகத்தால் அலங்கரித்து திலான்னம் நிவேகித்து முன்று பத்திரங்கொண்ட வில்வத்தால் அச்சனை செய்ய வேண்டும்.

திலம் - எள்

நாலாஞ் சாமத்தில் கருப்பஞ் சாற்றால் அபிடேகஞ் செய்து குங்குமம் சாத்தி நந்தியாவர்த்தத்தால் அலங்கரித்து சுத்தான்னம் நிவேதித்து நீலோற்பலத்தால் அர்ச்சனை செய்ய வேண்டும்.

வில்வம் நொச்சி மாவிலங்கை முட்கிளுவை விளா என்பவற்றின் பத்திரங்கள் பஞ்ச வில்வம் எனப்படும். இவற்றின் மூன்று பத்திரங்கொண்ட இலைகளை நான்கு சாமங்களிலும் சிவபெருமானது திருமுடிகளிற் சாத்தலாமெனக் காரணாகம் கூறுகின்றது.

நான்கு சாமங்களிலும் முறையே இருக்கு யசுர், சாம, அதர்வண வேதங்களை ஓத வேண்டும்.

நான்கு சாமப் பூசையும் முடிந்தபின், விடியற் காலையிற் சென்று நீராடி, காலைக் கடன் கழித்தது. தீட்சை, செய்த குருவை வணங்கி, பிராமணருக்குத் தானங் கொடுத்து அவருடைய அனுமதியோடு சூரியன் உதித்து ஆறு நாழிகை முடிவதற்கு முன் பாரணஞ் செய்தல் வேண்டும்.

மேற் கூறியவாறு வேதாகம விதிப்படி பூசைசெய்ய முடியாதவர்கள் ஐந்தெழுத்தை உச்சரித்து, சோட சோபசாரங்களால் சிவபெருமானுக்கு அன்போடு பூசனை புரிய வேண்டும்.

இதுவும் செய்ய மாட்டாதோர், சிவராத்திரி தினத்தில் ஊணொழித்து, சிவாலயத்துக்குச் சென்று இரவின் நான்கு சாமங்களிலும் சிவபுராணங் கேட்டும் ஐந்தெழுத்தை உச்சரித்தும் துயில் நீத்துச் சிவபெருமானை வழிபடுதல் முறையாகும்.





முதற்சாமப் பூசை முடிந்தபின், பசியால் வருந்துவோர் சிறிது நீர் அல்லது பால் பருகலாம் பழங்களை அற்பமாகப் புசிக்கலாம். இவற்றுள் நீர் பருகுதல் உத்தமமும், பால் பருகுதல் மத்திமமும், பழமுண்ணுதல் அதமமுமாகும். பணிகாரம் உண்ணுதல் அதமத்தில் அதமமாகும்.

சிவராத்திரி தினத்தன்று சூரியன் மறைந்து பதினான்கு நாழிகைக்கு மேல் (5 மணி 36 நிமிஷத்துக்கு மேல்) வரும் ஒரு முகூர்த்தமாகிய இரண்டு நாழிகை (48 நிமிஷம்) இலிங்கோற்பவ காலமெனப்படும். இக்காலத்தில் சிவாலய தரிசனஞ் செய்வது உத்தமோத்தம புண்ணியம். அதனால் நான்கு சாமமும் நித்திரையொழிக்க இயலாதவர் இலிங்கோற்பவ காலம் நீங்கும் வரையாவது நித்திரையொழித்தல் வேண்டும்.

பாரணஞ் செய்தோர் சிவகதை பேசிப் பகற் பொழுதைப் போக்கி மாலைக்கடன் கழித்ததற் பின் நித்தரை செய்யலாம் பாரணஞ் செய்த பின் அன்றைய தினம் உணவுண்ணல் ஆகாது.

பாரணந் தான் புரிந்ததற்பின், பகற்பொழுதிற் சோம்பொடுகண் படைசெய்தாரே
லாரணங்கள் பயின்றகுல வந்தணரைம் பதிற்றிரட்டி யாயினோரைக்
காரணங்க ளொன்றுமின்றிக் கொன்றகடும் பழியடைவர்...
(49 சிவராத்திரி மான்மியச் சுருக்கம்) எனச் சிவராத்திரி புராணமும்,
பாரணம் விதியிற் செய்தோன் பகற்பொழு துறங்கு மாயி
னாரண மறையோர் தம்மி லைம்பதிற் றிருவர் தம்மைக்
காரண மின்றிக் கொன்ற கடும்பழி யெய்தும்...
(கந்த விரதப்படலம் 15) எனக் கந்த புராணமுங் கூறுகின்றன.

முத்தியை விரும்புவோர் இருபத்து நான்காண்டு நியமந் தவறாது சிவராத்திரி நோன்பை நோற்றபின் வேதியர்க்குத் தானங்கொடுத்து, மகேசுர பூசை செய்து இந்நோன்பை நிறுத்துவது வழக்கமாகும். இப்பேறு மிகச் சிலருக்கு மாத்திரங் கிடைக்கும் பெற்றகரும் பேறாகும். அதைப் பெற நாமும் முயலுவோம்.



# நவராத்திரி

புரட்டாதி மாத்திலே அமாவாசைக்குப் பின் வரும் ஒன்பது நாளும் (பிரதமை தொடங்கி நவமி முடியும் வரையுமுள்ள நாள்கள். சில ஆண்டுகளில் எட்டு நாளாகவும் சிலவற்றில் பத்து நாளாகவும் வரும்) நவராத்திரி எனப்படும் பூசை சிறப்பாக நடாத்தப்படுவதும் இராக்காலத்திலாதலால் இராத்திரி எனப்படும். (நவ ஒன்பது) இந்த ஒன்பது நாள்களிலும் உமாதேவியாருக்கும், துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய சக்திகளுக்கும் விசேடபூசை நடைபெறும். உற்சவங்கள் நடப்பதுமுண்டு. துர்க்கை வீரத்தையும், இலட்சுமி செல்வத்தையும், சரஸ்வதி கல்வியையும் கொடுக்கும் சக்திகளாம்.

## பூசைமுறை

மண்டபத்தின் நடுவிலே உமாதேவியாருக்கும் ஒரு கும்பமும், அதற்கு வடக்கே இலட்சுமிக்கொன்றும் அதற்குத் தெற்கே சரஸ்வதிக்கொன்றும் வைக்கப்படும். உமாதேவியாரது கும்பத்திலே துர்க்கைக்கும் பூசை செய்யப்படும். இந்த நான்கு தேவிகளுக்கும் ஒன்பது நாளும் நடைபெறும். ஒன்பதாம் நான் மகிடாசுரனைக் துர்க்காதேவி கொன்ற பாவனைகாட்டப்படும். நான்கு சக்திகளுக்கும் விஷேசபூசை செய்யப்படும். நவமியாதலால் மகாநவமியென்ப்படும். நவமியில் முடியத்தக்கதாக ஏழு நாளாகவும் ஐந்து நாளாகவும் மூன்று நாளாகவும் ஒரு நாளாகவும் பூசை செய்வதுமுண்டு.

## மானம்பு

இந்த நவமிக்கடுத்த நாள் மானம்ப என்னும் விஜயதசமி என்றும் சொல்லப்படும் மானம்பூ என்பதற்குத் தலைவர் அம்புபோடும் நாள் என்று கருத்துக்கொள்வர். (மான்- பெரியவர்) அன்றைக்கு ஒவ்வொரு கோயிலிலுமுள்ள பிரதான மூர்த்தியை (சிவன் கோயிலிற் சிவபெருமன், சுப்பிரமணியர் கோயிலிற் சுப்பிரமணியர் .....) பூசித்துக் கோயிலிற்





வெளியே அம்புபோடும் இடத்துக்கெழுந்தருளிச் செய்வர். கடவுள் அம்பு போட்டுக்கொல்லுவது அசுரனையே. அசுரன் எனப்பட்டது. ஆன்மாக்களை வருத்தும் மலமாம். ஒரு வன்னிமரத்தை நட்டு அதை அந்த அசுரனாக பாவித்து அந்த மரத்தை அம்புபோட்டு அதைத் துணிக்கும் பாவனை காட்டப்படும். வன்னிமரம் அரிதாலால் ஒரு வன்னி மரக்கொப்பை வாழையிலே பதித்துத் துணிப்பதுமுண்டு. சகல ஆன்மாக்களும் சுகமடைதற்காக இது செய்யப்படுவது. ஒன்பது நாளும் சிவசக்திகளுக்குச் செய்த பூசையின் பலனால் அடுத்த நாள் எந்தக்காரியமும் கை கூடுமாதலால் அந்தநாளுக்கு விசய தசமியென்று பெயர் (விஜயம் - வெற்றி) அன்றைக்கு படிப்புத் தொடங்குவதும் நன்று.

மகிடாசுரனது கதை அருணாசல புராணந்திலுள்ளது. அது பின்வருமாறு மகிடன் ( எருமை முகத்தை உடையவன்) என்ற ஓர் அசுரன் இருந்தான் அவன் யாவரிலும் மிக்க பலசாலி, நஞ்சிலுங் கொடியவன், தேவேந்திரன் முதலிய தேவர்களை அடக்கி அவர்களுக்குங் கொடுமை செய்தவன். ஒரு நாள் அவனுடைய உணவுக்காக மிருகங்களைத் தேடி வேட்டையாடுவதற்கு ஆயிரம் ஏவற்காரர் காட்டுக்குப் போனார்கள். காட்டிலிருந்து தேவர்கள் அவர்களைக் கொன்று விட்டார்கள். இதை மகிடனுடைய தூதர்கள் அவனக்குத் தெரிவிததார்கள். அதைக்கேட்ட அவனுடைய படைத்தலைவன் சேனைகளோடு போருக்குப் போய்த் அப்போது துக்கையம்மை அவனைக் கொன்று அவனுடைய தலையைத் திருவடியால் மதித்தனள். அதன் பின் வேறு உருவங்கொள்ளாது நற்கதியடைந்தான்.

இது மலத்தினால் அறிவு கெட்ட ஆன்மா கடவுளை மதியாது நடத்தலையும் மலத்தின் சக்திகள் ஒவ்வொன்றுங் கெடக் கெட வேறொன்று தோன்றி ஆன்மா வினின்று முறைத்தலையும் ஈற்றிலே யாவுங் கெட்ட பின் சிவசத்தியில் திருவடியாகிய மெயஞ்ஞானத்தைப் பெறுதலையும் குறிப்பது ஆகும்.

# சித்திரா பூரணை

சித்திரா பூரணை, அமாவசை விரதமும் பிதிரர்க்குரிய விரதங்கள். நம் முன்னோர்களை நினைவு கூர்ந்து நன்றிக்கடன் செலுத்தும நாட்கள் பூரணை அமாவாசைத் தினங்கள். பூரணை விரதம் தாய் வழியினருக்காக அனுட்டிக்கப்படும் விரதம். அமாவாசை விரதம் தந்தை வழியினருக்காக நோற்கப்படும் நோன்பு சோதிடவியலாளர் சந்திரனை மாதுருகாரகன் எனவும் சூரியனை பிதுரக்காரகன் எனவும் அழைப்பர். பூரணைகளுள் உத்தராயனத்தில் வரும் சித்திரைப் பூரணையும் தெட்சணாயணத்தில் வரும் ஐப்பசி பூரணையும் சிறந்தன. இதேபோன்று ஆடி அமாவாசையும் தை அமாவாசையும் சிறப்புடையது. ஆகவே ஒவ்வொருமாதப் பூரணைக்கும் அமாவாசைக்கும் விரதமிருக்க முடியாதவர்கள் சித்திரா பூரணையையும் அடி அமாவாசையையும் தவறவிடுவதில்லை.

நமது நாள் காட்டியில் ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள் சித்திரை மாதம் தேவர்களுக்கு நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையுள்ள மத்தியானப் பொழுது மத்தியான வேளையே பிரிரரிகளுக்குரிய காலமாதலால் சித்திரை மாதம் பிதிர்க்கடனுக்கு விசேடமுடையதாகின்றது.

சித்திரை நட்சத்திரத்தில் பூமி மேடராசியில் சஞ்சரிக்கும். சந்திரன் சித்திரை நட்சத்திரத்தோடு கூடி சித்திரை நட்சத்திரத்திறிகுரிய துலா இராசியில் சஞ்சரிப்பான். மேடத்துக்கு துலாம் ஏழாம் இடம். பூமிக்கு ஏழாம் இடத்தில் நிற்கும் சந்திரன் முழு வலிமை பெறுகின்றான். இந்நாற் வருடத்தில் ஒரு தடவை ஏற்படும் 'பருவங்களுள் சிறந்த வசந்தகாலமும் மாதங்களுள் சிறந்த சித்திரையும் திதிகளில் சிறந்த பூரணையும் கூடிய சித்திரா பூரணையன்று செய்யப்படும் வழிபாடு வருடம் முழுவதும் செய்யப்படும் வழிபாட்டிற்குச் சமம்' என இந்திரனுக்கு மதுரை சுந்தரேஸ்வரப் பெருமான் திருவாய் மலர்ந்தருளியதாக திருவிளையாடற் புராணம் கூறுகின்றது. மதுரையில் நடைபெறும் சித்திரைப் பெருவிழா பிரசித்தமானது.





சித்திரா பூரணையன்று புண்ணிய தீர்த்தமொன்றில் தீர்த்தமாடி விரதமிருந்து பிதுர்க் கடன்கள் செய்வதால் பிதிரர்கள் நலமடைவர்.

எமது பாவ புண்ணியக் கணக்குகளையெல்லாம் எழுதுபவர் சித்திர புத்திர நாயனார் எனப்படுபவர். குழந்தைப் பேறு வேண்டி இந்திரனும் இந்திராணியும் செய்த தவத்திற்கு இரங்கி சிவபெருமான் சித்திர புத்திரரை இந்திரனுக்குப் புத்திரராகப் பிறக்க அருள் புரிந்தார். சித்திர புத்திரனார் காமதேனு வயிற்றில் உதித்தார். இக்கதை சித்திரா பூரணையன்று கோவில்களில் படிக்கப்பட்டு கஞ்சி காய்ச்சிப் படைக்கப்படும். அன்னதானங்கள் நடைபெறும். இது சித்திரைக் கதை எனவும் சித்திரைக் கஞ்சி எனவும் வழங்கப்பெறுகின்றது.

### மோட்டச சத்தருக்கள்

பதின்மூன்று குண பேதங்கள் ஒருவன் மோட்சம் என்கிற வீடுபேறு அடைவதற்குத் தடையாக இருப்பதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவையாவன.

1. இராகம் உணர்ச்சிகளுக்கு அடிமையாகித் தவறு இழைத்தல்
2. துவேசம் மற்றவர்கள் மீது வெறுப்புப் பராட்டிச் செயற்படுவது
3. காமம் சிற்றின்ப வேட்கையால் தவற புரிவது
4. குரோதம் வன்மை கொண்டு பழிவாங்குவது
5. உலோபம் கஞ்சத்தனமாகக் காரியம் செய்வது
6. மோகம் வரம்பு மீறி ஆசை கொள்வது
7. மதம் திமிர் கொண்டு செயற்படுவது
8. மாற்சரியம் பொறாமை கொண்டு புளுகுதல்
9. ஈரிஷை பொறுமை இழந்த ஆத்திரம் கொள்வது
10. ஆசூசை ஒருவரைப் பிடிக்காமல் அவதூறு பேசுவது
11. டம்பம் ஆடம்பரமான காரியங்களில் ஈடுபடுதல்
12. தற்பம் தற்பெருமை பேசுவது
13. அகங்காரம் தம்மைத் தவிர ஏனையோரை மதிக்காத போக்கு

## சுக்கிரவார விரதம்

வைகாசி மாதத்து சுக்கிலபட்சத்து முதற் சுக்கரவாரந் தொடங்கி ஒவ்வொரு சுக்கிரவாரந்தோறும் விநாயகக் கடவுளைக் குறித்து அனுட்டிக்கும் விரதம் சுக்கிரவாரவிரமமாகும் இவ்விரதமும் விநாயகருக்குரிய முக்கிய விரதங்களில் ஒன்றாகும்.

## விநாயகர் ஷஷ்டி விரதம்

இவ்விரதமானது கார்த்திகை மாசத்துத் திருக்கார்ததிகையை அடுத்து வரும் கிருஷ்ணபட்க்ஷ பிரதமை முதல் மார்கழி மாசத்துச் சுக்கில பட்ஷ ஷஷ்டி யீறாக வாரம் இருபத்தொரு நாட்களிலும் விநாயகப் பெருமானை குறித்து அனுட்டிப்பது விநாயகர் ஷஷ்டி விரதமெனப்படும். விரதாரம்ப திதியாகிய பிரதமைகது ரோகிணியும் விரதாந்த திதியாகிய ஷஷ்டிக்குச் சதயமும் சேர்ந்து வருவது விஷேடமார். இதில் இருபத்தோரிழையாலாகிய காப்பை ஆடவர்கள் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் கட்டி முதல் இருபது நாளும் ஒவ்வொரு பொழுது போசனம் செய்து இறுதி நாளாகிய சட்டியிலிருந்து உபவாசமிருத்தல் வேண்டும். இவ்விரதநாட்களில் பெருங்கதை எனப்படும். பிள்ளையார் கதை அதாவது விநாயகப் பெருமானுடைய பெருமையையும் சரித்திரமும் வாசித்தும் கேட்டும் கரும்பு, இளநீர் மோதகம், அப்பம், அவல் எள்ளுண்டை முதலாய நிவேதனப் பொருட்கள் நிவேதித்தும் வழிபாடியற்றுதல் வேண்டும். ஈழத்துச் சைவத் தமிழ் மக்களிடையே பிரபல்யம் வாய்ந்தது வரதபண்டிதரின் பிள்ளையார் கதை இதனை ஆலயங்களில் வாசிப்பர்

## விநாயகர் சதுர்த்தி விரதம்

ஆண்டு தோறும் ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தி நாளில் விநாயக சதுர்த்தி விரதத்தை தொடங்க வேண்டும்.

**விரதம் அனுட்டிக்க வேண்டிய முறை**

ஆவணி மாதம் வளர்பிறை நாலாம் நாள் விடிகாலையில் எழுந்து நீராடல் வேண்டும் பிறகு அபிஷேக நீர், மலர், ஊதுபத்தி, சூடம், தூபம் படைக்கும் பொருள் ஆகியவற்றைச் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். அதன் பிறகு விநாயகரை வழிபடுவதற்கு ஏற்ற அமைதியான





ஓரிடத்தை மெழுகிச் சுத்தப்படுத்தி கோலமிட வேண்டும். சுத்தமான களிமண்ணினால் ஒரு விநாயகரையும் அவரவர் சக்தி ஏற்பத் தங்கம், வெள்ளி போன்ற ஏதேனும் ஓர் உலோகத்தால் ஒரு விநாயகர் உருவத்தையும் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு கங்கையில் நீராட வேண்டும். அல்லது அதன் பிறகு திருநீறு பூசிக் கொள்ள வேண்டும். தலை, கழுத்து, கை, காது ஆகிய இடங்களில் உருத்திராட்ச மாலையை அணிந்து கொள்ள வேண்டும்.

பின்னர் வழிபாடு செய்யும் இடத்திற்கு வந்து எள்ளைப்பரப்ப வேண்டும். அதன் மீது நூல்சுற்றி நீர் நிரப்பி பூர்ண கும்பத்தை வைக்க வேண்டும். அதன் அருகில் மண்ணாலும் உலோகத்தினாலும் செய்த விநாயகர் உருவங்களை வைக்க வேண்டும். விதிமுறைப்படி கணேசர் மந்திரத்தை உருவேற்ற வேண்டும். இங்ஙனம் புரட்டாதி மாதம் சுக்கில பட்சத் சதுர்த்தி வரையில் நாள் தோறும் வழிபட வேண்டும். தம்மால் முடிந்த தானதர்மங்களை நாள்தோறும் செய்ய வேண்டும். விரத முடிவில் மண்ணால் செய்த விநாயகரை ஆற்றில் அல்லது குளத்தில் விட்டு விடுதல் வேண்டும்.

இந்த முப்பது நாளும் உணவு உண்ணாமலும் தூங்காமலும் விரதம் இருக்க வேண்டும். முப்பத்தொன்றாவது நாள் உற்றார், உறவினர், துறவியாருடன் உணவு உட்கொள்ளுதல் வேண்டும். இங்ஙனம் இருப்பதற்கு உடம்பு இடந்தராதவர்கள் ஆரம்ப தினமாகிய முதல் நாள் மட்டுமாவது முன்பு கூறிய முறைப்படி வழிபாடு செய்தல் வேண்டும். குறைந்தபட்சம் இருபத்தொருபேருக்கு உணவு இடுதல் வேண்டும். இங்ஙனம் விநாயகர் சதுர்த்தி விரதம் இருப்பவர்கள் செல்வச் சிறப்புடன் கருதிய காரியம் கைக்கூடப்பெற்று வாழ்வார்கள்.

## சங்கடகர சதுர்த்தி விரதம்

மாசி மாதம் அபரபட்சத்தில் செவ்வாய்கிழமையுடன் கூடிய சதுர்த்தி நாளில் விரதத்தை தொடங்க வேண்டும். அன்று காலையில் சூரியன் உதிக்கும் சமயத்தில் நீராடவேண்டும். திருவெண்ணீறு பூசி உருத்திராக்கம் முதலியவற்றை குறிப்பிட்ட அங்கங்களில் அணிந்து கொள்ள வேண்டும். பிறகு ஒரு அமைதியான இடத்தில் அமர்ந்து கொண்டு விநாயகர் கடவுளை மனத்தில் நினைத்து ஓர் எழுத்து மந்திரம், ஆறு எழுத்து மந்திரம், திருப்பெயர் மந்திரம் ஆகியவற்றை அல்லது மாலைவரை உணவு முதலியன இன்றி உருவேற்ற வேண்டும்.

இவ்வாறு தொடங்கிய இந்த விரதத்தை மாதச் சதுர்த்தி தோறும் ஓராண்டு வரை செய்தால் பின்னால் செல்வம் முதலாய எல்லாச் செல்வங்களும் உண்டாகும். வன்னி மரத்தடியில் இருந்து இவ்விரதத்தை நோற்றால் கூன், குருடு முதலாய உடற்குறைகள் நீங்கப்பெற்று வேண்டிய பொருளை பெறலாம். இச் சதுர்த்தி செவ்வாய்க்கிழமை வருமானால் அது விநாயகக் கடவுளுக்கு மிக்க மகிழ்ச்சியைத் தரும் சதுர்த்தியாகும். இவ்விரதத்தை நியமப்படி கடைப்பிடித்தால் சங்கடங்கள் எல்லாம் நீங்கும் நன்மையுண்டாகும். எனவே செவ்வாய்க்கிழமை வருகின்ற விநாயகர் சதுர்த்தி சங்கடகரசதுர்த்தி எனப்படுகின்றது.

மாலை நேரத்தில் சந்திரன் உதயமானவுடன் விநாயர் கடவுளின் திருவுருவத்தை வைத்து வழிபாடு செய்து சந்திரனுக்கு வழிபாடு செய்ய வேண்டும். அதன்பின் பலருக்கு அறுசுவையுடன் கூடிய உணவை வழங்க வேண்டும். அன்று இரவு முழுவதும் உறங்காமல் விநாயகர் அருளிய திருவிளையாடல்களைப் படிக்க வேண்டும்.

## திருக்கார்த்திகை

சோதியாய் சுடராய் சூழ் ஒளி விளக்காய்த் திகழ்பவன் இறைவன் ஆதியும் அந்தமும் அற்ற கற்பனை கடந்த அரும் பெரும் சோதியே தேசுடை விளக்குகளை ஏற்றி வழிபடுகின்ற திருநாள் திருக்கார்த்திகைத் தீபத்திருநாள். இது விளக்கீடு எனவும் அழைக்கப்படும்.

விளக்கீடு கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திரத்தன்று கொண்டாடப்படும். அன்று பூரணை தினமாக அமைந்தால் மிக விசேடம்.

பிரம்ம விட்டுனுகளின் செருக்கை அடக்க சிவபெருமான் சோதிப்பிழம்பாகத் தோன்றியதும் அப்பிழம்பின் அடி, முடி காண முடியாது செருக்கழிந்த பிரமவிட்டுணுக்கள் அச்சோதிவடிவைத் தங்களுக்கு எப்போதும் காட்டியருள வேண்டுமென்று பிரார்த்திக்கும் கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திரத்தில் காட்டுவோம் எனச் சிவனால் அருளியதும் நாமறிந்த புராணக்கதை.

முருகப்பெருமான் வைகாசிப் பெருநாளில் **தோன்றியமையால்** 'விசாகன்' எனவும், அக்கினி சம்பந்தப்பட்ட**மையால் 'அக்கினிகர்ப்பன்'** எனவும், கங்கையில் தவழ்ந்ததினால் **'காங்கேயன்' என்றும், சரவணப்** பொய்கையில் அவதரித்ததால் 'சரவணபவன்' **எனவும் அழைக்க**ப்படுவது போல் கார்த்திகை மாதர்களால் வளர்க்கப்பட்டபடியால் **'கார்த்திகேயன்'** **எனவும்** பெயர் பெற்றான்.





இவ்வாறான சோதி சொரூபமான இறைவன் ஆன்மாக்கள் மீது இரங்கி ஆறுமுகப் பரம்பொருளாகத் திருவுருக் கொண்டதால் அக்கினியை அதிதேவதையாகவுடைய கார்த்திகை நட்சத்திரம் முருக வழிபாட்டிற்கு மிக உகந்த நட்சத்திரமாகின்றது.

திருவண்ணாமலை பங்ச பூதத் தலங்களில் தீக்கு உரிய தலம் ஆதலால் தீபத் திருவிழா இத்தலததில் பெருவிழாவாக அமைகிறது. அண்ணாமலையின் அடிவாரத்தில் அருணாசலேஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. நினைக்க முத்தி தரும் தலம் இது உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய அருணாசலேஸ்வரனைத் தொழுவார் வினை வழுவா வண்ணம் அறும் என சம்பந்தர் அறுதியிட்டுச் சொல்கிறார். சிவபெருமான் பிரம விட்டுணுக்களுக்கு சோதிப்பிளம்பாகத் தோன்றிய மலைதான் திருவெண்ணாமலையாயிற்று என கூறப்படுகிறது.

அதாவது மாயையாகிய திரை விலக பரம்பொருளாகிய சிவபெருமான் பசுக்களாகிய ஆன்மகோடிகளுக்கு ஞானச்சுடர் விளக்காய் காட்சி தருவதையே இவ்விழா உணர்த்துகின்றது.

## தீபமுகமும் திசையும்

முத்துவிளக்கின் தீபம் கிழக்கு முகமாக ஏற்றினால் துன்பங்கள் நீங்க வசீகரம் உண்டாகும். மேற்கு முகமாக ஏற்றினால் கிரகதோஷம் பங்காளிகள் பகைபோகும். வடக்கு முகமாக ஏற்றினால் திரண்ட செல்வம் சேரும் கல்வித்தடை சுபகாரியத்தடை போகும் தெற்கு முகமாக ஏற்றுவது மிகவும் பாவம் எமனுக்கு பிதே, துஷ்ட தேவதை ஓடிவரும்.

ஒரு முகம் ஏற்றினால் மத்தியபலன் இருமுகம் ஏற்றினால் குடும்ப ஒற்றுமை மும்முகம் ஏற்றினால் புத்திர சுகம், கல்வி கேள்விகளில் விருத்தி, நான்கு முகம் ஏற்றினால் பசு, பால், பூமி, விருத்தி, ஐந்து முகம் ஏற்றினால் சர்வபீடை நிவர்த்தி, ஐஸ்வரியம் லட்சுமி கடாட்சம் **ஆகியன** பெருகும்.

**-சுபமுனிவர்**

## ஏகவிம்சதிபந்திரம் 21 பத்திரங்கள

| | | |
|---|---|---|
| 1. மாசீபத்திரம் | - | இலவமிலை மாசிஇலை |
| 2. பிருகதீபத்திரம் | - | கண்டங்கத்திரி |
| 3. பில்வத்திரம் | - | வில்வமிலைஸ |
| 4. துர்வாயுக்கம் | - | அறுகு |
| 5. துர்த்தூர | - | பத்திரம் ஊமத்தை இலை |
| 6. பதபெத்திரம் | - | இலந்தை இலை |
| 7. அமாமார்க்கபத்திரம் | - | நாயுருவி இலை |
| 8. துளசிபத்திரம் | - | துளசி இலை |
| 9. சூதபத்திரம் | - | மாவிலை |
| 10. கரவீரபத்திரம் | - | அலகி இலை |
| 11. விட்டுனுகிராந்த | - | பத்திரம் விட்டுணுக்கிராந்தி இலை |
| 12. டாடிமீ பத்திரம் | - | மாதுளை இலை |
| 13. ஆமலக பத்திரம் | - | நெல்லி இலை |
| 14. மருவக பத்தரம் | - | மருக்கொழுந்து |
| 15. சிந்தூர பத்திரம் | - | நொச்சி இலை |
| 16. ஜாஜீபத்திரம் | - | சாந்புஷ்பமிலை (மல்லகை) |
| 17. கந்தலீபத்திரம் | - | வெள்ளறுகு |
| 18. சமீபத்திரம் | - | வன்னியிலை |
| 19. பருங்கராஜபத்திரம் | - | கரிசலாங்கண்ணி இலை |
| 20. அர்ச்சுநபத்திரம் | - | மருத இலை |
| 21. அர்க்க பத்திரம் | - | எருக்கமிலை |

## ஏகவிம்சதி புஷ்பாணி 21 புஷ்பங்கள்

| | | |
|---|---|---|
| 1. ஜாஜீபுஷ்பம் | - | ஜாதிப்பூ |
| 2. சாவந்திகாபுஷ்பம் | - | செவ்வந்திப்பூ |
| 3. சம்பகபுஷ்பம் | - | சண்பகப்பூ |
| 4. வருளபுஷ்பம் | - | மகிளம்பூ |
| 5. பாடலீபஷ்பம் | - | பாதிரிப்பூ |
| 6. புன்னாகபுஷ்பம் | - | சுரபுன்னைப்பூ |
| 7. துரோணபுஷ்பம் | - | தும்பைப்பூ |
| 8. ரசாலபுஷ்பம் | - | மாம்பூ |
| 9. அமிருணாளபுஷ்பம் | - | வாமிச்சம்பூ |
| 10. கல்வறாரபுஷ்பம் | - | செங்குவளைப்பூ |





| | | |
|---|---|---|
| 11. கமலபுஷ்பம் | - | தாமரைப்பூ |
| 12. மல்லிகாபுஷ்பம் | - | மல்லிகைப்பூ |
| 13. துர்த்தூரபுஷ்பம் | - | ஊமத்தம்பூ |
| 14. சம்யாகபுஷ்ாம் | - | கொன்றைப்பூ |
| 15. அர்க்கபுஷ்பம் | - | எருக்கலம்பூ |
| 16. கரவீரபுஷ்பம் | - | அலரி |
| 17. வில்வபுஷ்பம் | - | சில்வம்பூ |
| 18. மந்தரா புஷ்பம் | - | மந்தாரைப்பூ |
| 19. கேதகிபுஷ்பம் | - | தாழம்பூ |
| 20. பாரிஜாதபுஷ்பம் | - | பவளமல்லிகைப்பூ |
| 21. டாடிமிபுஷ்பம் | - | மாதுளம்பூ |

கருணை வள்ளல் கணபதியைத் தொழ
அருமைப் பொருட்கள் அனைத்தும் வருமே.

## ஆசௌச விளக்கம்

*தொகுத்து எழுதியவர்: திரு. ஆ. சபாரத்தினம் அவர்கள்*

*சம்ஸ்கார பராம்ரிசம் உண்மை யானும்*
*அதன் இளமை கூறப்பட லானும்"*
*-(பிரமசூத்திரம் 101 )*

*"புறந்தூய்மை நீரான் அமையும்: அகந்தூய்மை*
*வாய்மையாற் கரணப் படும்"*
*திருக்குறள், 298.*

*முன்மொழி என ஔவையார் பாராட்டிய பிரமசூத்திரம் சம்ஸ்காரங்கள் மூலமே ஒருவன் ஞானம் பெறதக்க பக்குவம் பெறுவான் என்பதை வலியுறுத்துகிறது. தரும சாத்திரங்களிலே நாற்பது சம்ஸ்காரங்கள் பேசப்படுகின்றன. சைவ ஆகமங்கள் அவற்றுள் பதினாறை வலியுறுத்தும். (சமஸ்+ காரம் தூய்மைப்படுத்திதும் கிரியை*

அவை ஏன்? ஆன்மீக வாழ்வுக்கு உயிர்நாடியான அவை இன்றைய லௌதிகப் போக்குக்கு வேண்டியவை தாமா? இவ்வித ஐய வினாக்கள் சைவ மக்களிடையே எழுகின்றன. இளைஞர்கள் தாங்கள் அவற்றைப் பரவாய் செய்வதில்லை அம்மா குளியாமல் வீட்டுக்குள் விட்டார் என்கிறார்கள். முக்கியமாக மரண வீட்டுக்குச் சென்று வருவோர் தூய்மை செய்யப்படுவது அவசியம் என்று பழமை பேணுவோர் கருதுகிறார்கள். இது விஞ்ஞான அடிப்படையில் தோன்றியது. என்று விளக்கம் அளித்துத் திருப்தியடைகிறார்கள். சுகாதார பரமான தூய்மைக்கும், கிரியா பரமான தூய்மைக்கும் வேறுபாடு உண்டு. என்பதை அவர்கள் உணர்வதில்லை. இருவேறு திசையில் போகும் நாகரிகங்களின் மோதுதலில் சிக்கித் தவிப்பவர்களின் சந்தேகங்களைப் போக்கி 'துவந்துவங்கள் தூய்மை செய்' வதே இத்தொகுப்பின் நோக்கம்.

சைவசமயிகளிடையே கோவிலுக்குப் போதல், விவாகம் போன்ற நற்கருமங்களின் போது, எனக்கு ஆசூசம் என்ற பேச்சு இடம்பெறும். அதை எதிர்த்தும், விஞ்ஞான விளக்கம் கொடுத்து ஆதரித்தும் பேசுவோர் அதிகம். ஆசௌசம் என்ற சொல் திரிந்து பேச்சு வழக்கில் ஆசூசம் ஆயிற்று.

'சுசி' என்றால் சுத்தம். சௌசம் சுத்தம் உடையது. அசுசி= அழுக்கு; ஆசௌசம் (கிரியாபரமான) சுத்தம் இன்மை. ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டுக் கிரியைகளைச் செய்கிறவனுக்கு, அவைகளைச் செய்ய அதிகாரம் இல்லாமற் செய்யும் ஓர் அசுத்தி சௌசம் எனப்படும். தீட்டு, தொடக்கு என்றசொற்களும் மக்கள் பேச்சில் வரும் தொடக்கை நீக்கிய பின்னரே நற்காரியங்கள் செய்யலாம். இல்லாவிட்டால். உளரீதியான ஓர் அருவருப்பு உள்ளே இருந்து கொண்டே இருக்கும் மனம் ஆன்மீக நற்கருமத்தில் படியாது.

அசுத்தியை (அழுக்கை)ப் போக்க

1. காலம்
2. ஸ்நானம் இரண்டும்
3. காலம், ஸ்நானம் இரண்டும்.

ஆக மூன்று வழிகள் இருக்கின்றன.





1. ஊரில் ஒரு இறப்பு நிகழ்கிறது. அழுகை, மேளஒலி, ஒலிபெருக்கி மூலம் மரணம் பற்றி ஊரார் அறிகின்றனர் கோவிற் பூசை நிறுத்தப்படும். சற்காரியங்கள் நடைபெறா. ஊர்த்தெட்கு பிரேதம் ஊருக்குள் இருக்கும் காலம் வரை அவ்வூர் மக்களைப் பீடிக்கும் பிரேதம் ஊரிலிருந்து அகற்றப்பட்டதும் தொடக்கு நீங்கிவிடும்.

2. இறப்பு நிகழ்ந்த வீட்டுக்குச் சென்று, மரணச் சடங்குகளில் பங்கு பற்றிய அயலவர், உறவினரின் ஆசௌசம் ஸ்நானத்தால் நீங்கும்.

3. இரத்த உரித்துக்காரர் (ஆண்வழி) ஆகிய தொடக்குக் காப்போர் உறவு பற்றி, மனத்தில் துக்கம் நிலைத்திருக்கும். இறந்தோரை நினைத்து இடையில் அழுகை வரலாம் துன்பம் தோய்ந்த உள்ளத்துடன் ஆன்மீக முயற்சிகளில் ஈடுபட முடியாது. அதனால் ஒரு குறித்த கால எல்லை வைத்து அதன்முடிவில் நீராடி, அசௌசத்தை நீக்கலாம். இங்கு காலம், ஸ்நானம் ஆகிய இரண்டும் வேண்டிதாயிகிறது.

ஆசௌசம் பத்துவகையாக ஏற்படலாம்:

1. பிறப்பு 2 இறப்பு 3 சுடுதல், 4. பிரேதத்துக்குப் பின்னே செல்லல், 5. காவுதல், 6 அழுதல் 7.ஆசௌசிகளிடம் சாப்பிடுதல், 8. கலத்தல், 9. குறித்த கால எல்லையில் தலைமயிரை அகற்றாமை (மயிர் முழுவதையும் களைதல் ஆசௌச நீக்கத்தின் பொருட்டு இன்றும் பல கிராமங்களில் வழக்கம்)
10. இறந்தவருடைய உரிமைக்காரர் (மகன், அல்லது கொள்ளி வைத்தவர்) இறந்தவரது பிரேதத்னைமையை நீக்கி விடும் கிரியை ஆகிய சபிண்டீகரணம் செய்யலாம்.

## பிறப்பு

ஒரு வீட்டில் குழந்தை பிறத்தல் தொடர்பாக உண்டாகும் தொடக்கு நான்கு வகையானது.

1. கருச்சிதைவு நான்கு மாதத்துக்குள் நிகழ்தல்,
2. 5ஆம் 6ஆம் மாதங்களில் நிகழ்தல்
3. 7ஆம் 8ஆம் 9ஆம் மாதங்களில் நிகழ்தல்

4. பத்தாம் மாதத் தொடக்கத்தில் நிகழும் இயற்கையான பிறப்பு.

முதலிரு நிகழ்ச்சிகளிலும் எத்தனைமாதச் சிசு ளிப்படடதோ அத்தனை நாட்கள் தொடக்கு உதாரணம் 6ஆம் மாதத்தில் கருச்சிதைந்தால் 6 நாள் தொடக்கு. அதன்பிறகு நிகழ்ந்தால் இயற்கையாகக் குழந்தை பிறக்கும் போது தொடக்குக்காக்கும் நாள் அளவு

பிள்ளைப்பேற்றில் பெண் பிறந்தால் 40 நாளும் ஆண் பிறந்தால் 30 நாளும் பிதாமாதா இருவருக்கும் தொடக்கு.

முதல் ஆறு மாதத்துள் சிசு அழிதலில் தந்தை முழுகத் தொடக்குப்போம்.

தொடக்குக்காக்கும் உறவினர் (ஞாதிகள்) 6ஆம் மாத நிகழ்விலிருந்து முழுகி அசௌசத்தைப் போக்கலாம்.

பூரணகருச் சிதைவிலும், பிள்ளை பிறந்தவுடன் இறந்தாலும், தந்தை 10 நாள் தொடக்குக் காக்க வேண்டும்.

10 நாட்களுள் குழந்தை இறந்தால் மரணத்தொடக்குக் கொள்ளத் தேவையில்லை.

இயற்கையான பிறப்பில் 30 நாள் தொடக்கு காப்பது வழக்கம், (தாய்க்கு 40 நாள் என்ற முறையில் குழந்தையைக் கோவிலுக்கு 40 ஆம் நாள் கொண்டு போகும் வழக்கம் இருந்துவருகிறது) சைவக்குரு (ஆசாரிய அபிஷேகம் பெற்றவர்) அசௌச நிகழ்வில் உடன் சுத்தியாகிறார்.

தீட்சை பெற்ற சைவசமயத்தவருள் நியமங்களில் வழுவாது சந்தியாவந்தனம் செய்வோர் 25 நாளும். ஒழுக்காகக் கோயில் தொண்டு செய்வோர் 20 நாளும் தொடக்குக் காக்க வேண்டும்.

பிரமசாரிக்குத் தொடக்கில்லை என்பது குருகுலத்தில் வசித்து ஞான நூல்களைக்கற்றலில் காலம் கழிப்பவர்க்கே பொருந்தும் உறவினருடன் வசிக்கும் பிரமசாரி அர்ச்சகர் இவ்விதியில் அடைக்கலம் புகமுடியாது.

முன்றாம் தீட்சையாகிய நிர்வாண தீட்சை பெற்றுச் சிவபூசை தவறாது செய்கிறவருக்கு முன்று நாள் தொடக்கு.

கோவில்களில் ஓதுவார்களாகப் பணிபுரிவோர் 15 நாளும், பாடல், வாத்திய வழிபாடு செய்வோர் 14 நாளும் காக்க வேண்டும்.





## இறப்பு

மரண அசௌசமே பிரதானமாகப் பேணப்படுவது நம் நாட்டு வழக்கம், அதனால் இப்பகுதி விரிவாக எழுதப்படுகிறது. குழந்தை பிறந்து பெயர் இவதற்கு முன் ஒரு மாதத்தினுள் இறந்தால் உடன் சுத்தியாம், பல்முறைக்குமுன் ( 6மாதத்துள்) ஆயின், ஒரு நாள் தொடக்கு, 11ம் ஆண்டுக்குப் பின் முழுத்தொடக்கு, பெண்மகவு விவாகம் செய்யுமுன் இறந்தால் பெற்றோருக்கு 3 நாள் தொடக்கு விவாகம் நிச்சயித்த பெண் மணவிழாவுக்கு முன் இறந்தால் கணவனும் அவன் உறவினரும் 3 நாள் தொடக்குக் காப்பர். பிற ஆத்மசாந்திக் கிரியைகளுக்கு கணவன் விட்டாரே செய்ய வேண்டும். ஒரு மாதத்தின் பின் இறக்கும் சிசுவைச் சுடலாம். அன்றி புதைக்கலாம். 11 வயதுக்குப் பின் சுடுவதே நல்லது.

ஆண் மரணித்தால் ஆண்வழியில் ஏழுதலைமுறை வரை தொடக்குக்காக்க வேண்டும். குரு சீட தொடர்பு பற்றி 3 நாள் காக்க. தாய்வழிப்பாட்டன், பாட்டி, மாமன், மாமி மருமகள், மகள் வயிற்றுப்பேரன் ஆகியோருக்கு 8 அல்லது 6 நாள் தொடக்கு.

தானம் வேள்வி விவாகம் போன்ற சற்கருமங்களுக்கு இடையிலும், போர், உள்நாட்டுக்குழப்பம் மலைச்சரிவு, மரம் விழுதல் பூகம்பம் போன்ற பெரும் ஆபத்துக்களின் மத்தியிலும் வரும தொடக்கு உடனே நீங்கும். ஒரு வரம்கேட்டு அநுட்டிக்கும் உபவாச விரதத்தின் இடையில் தொடக்கு ஏற்பட்டால், தானம், அருச்சனை இரண்டையும் நீக்கி விரதத்தை அநுட்டிக்கலாம். விவாகம் செய்யும் மாப்பிள்ளை, கன்னியைத்தானம் செய்பவர். கோவில் திருவிழாவோ பிரதிட்டையோ செய்யும் ஆசாரியர், செய்விப்பவர் (யஜமானர்) துணைப்பணிகள் செய்வோர் ஆகியவர்களுக்கு உடன் சுத்தியாம். சிராந்தம், யாத்திரை ஆகிய புண்ணிய கருமங்களைச் செய்யும் போது தொடக்குண்டானால் உடன் சுத்தியாம்.

### வீரமரணம்

அரசசேகவர் போரில் இறந்தால் சுற்றத்தாருக்கு உடன் சுத்தி. அவ்விதம் இறந்தவர்களுக்கு அபரக்கிரியையும் உடன்

செய்யலர். (துர்மரணத்திற்போல, குறித்தகாலத்தின் பின்செய்யவேண்டும் என்ற விதியில்லை)

**துர்மரணம்**

இது இருவகை (1) புத்திபூர்வமானது: (2) அபுத்தி பூர்வமானது. முதல்வகையில் சாதாரண (மந்திரமின்றி) மரணக்கிரியை (சுடுதல்) செய்யலாம். பின்னர் உரிய காலத்தில் செய்யும்போது. மந்திரத்துடன் கிரியைசெய்யலாம். இதில் சபிண்டருக்குத் தொடக்கு இல்லை. ஸ + பிண்டர் - தென்புலத்தாருக்குப் பிண்டம் இடும் கடன் உள்ள உறவுமுறைக்குள் அடங்குவோர். தன்னையும் சேர்ந்து ஏழுதலை முறை (ஆண்வழியில்) பின்னர் ஆறுமாதம் அல்லது ஒருவருடம் கழித்துக் கிரியை செய்யும்போது ஒருநாள் காக்க வேண்டும். (முளைப்பிசகினால் தற்கொலை செய்தவருக்கு நீர்க்கடன் செய்துதொடக்குக் காக்கலாம் என்பர்) இரண்டாவது வகையான துர்மரணம் இடி தீ, ஆற்றுப்பெருக்கு, விஷகடி போன்ற தீடிர் விபத்துக்களால் நிகழ்வது இதில் கிரியையும் அசௌசமும் கொள்ளலாம்.

## பொருள்கள் சுத்தி

தொடக்கு உடையவர் உபயோகித்த பொருள்கள் குற்றம் உடையன அவர் தொடக்கு முடியும்போது நீர் தெளித்தல், கழுவுதல் போன்றவற்றால் குற்றம் நீங்கும். தொடக்கு ஆரம்பிக்குமுன் சில நற்கருமங்களுக்கு எனக் குறித்து எடுத்து வைத்த பொருள்களுக்கு குற்றமில்லை. (தானம், பூசை, முதலியவற்றுக்கு உபயோகிக்காலம். பொன், தானியம், வெல்லம், உப்பு, பால், நெய், முதலியவற்றைத் தொடக்கு வீட்டில் ஈருந்து பெறலாம்.

## கிராம ஆசௌசம்:

ஓர் ஊரில் பிரேதம் இருக்கும் வரை சகலருக்கும் தொடக்கு இருப்பதால், கோவிற்பூசை முதலியன செய்யக்கூடாது சிவபூசை, அநுட்டானம், உண்பது போன்றவற்றையும் விலக்கப்படடுள்ளன.





பிரேதம் கிராமத்தை விட்டு அகற்றப்பட்ட பின் பிராயசித்தம் செய்து கர்ம அனுட்டானங்களைச் செய்யலாம். இது சிற்றூர்களுக்குப் பொருந்தும். பல வீதிகளுள்ள பெரிய ஊர் ஆனால் தூரத்தில் பிரேதம் இருந்தால் ஓர் எல்லைக்கு அப்பால் வசிப்பவர்களுக்குத் தொடக்கு இல்லை. எல்லை கணிக்கும்போது (பூசைக்குரிய) கைமணி அடிக்கும் ஓசை கேட்கும் தூரம் அல்லது 11 முதல் ஆகிய (விற்) கோல் (நில அளவு) 11 (சுமார் 55 யார்) கொண்ட தூரம் ஆசௌச எல்லையாக எடுத்துக்கொள்ளலாம். அடுத்த வீதியில் பிரேதம் இருந்தாலும் இந்தக் கணிப்பின்படி வரும் இடைவெளிக்குள் தொடக்குக் காக்கலாம். அப்பால் இருந்தால் ஆசௌசம் இல்லை.

கோவிற் பிரதிட்டை முதலிய கிரியைகளுக்கு நடுவில் கிராமத்தில் ஒரு மரணம் நிகழ்ந்தால் இறந்த பிரேதத்தை மயானத்திற் சேர்த்த பின் தொடர்ந்து கிரியை செய்யலாம். பட்டணம், இராசதானி முதலிய பெருநகர்களில் தொடக்கு இல்லை. பிரேதத்தை தொட்டவர், தூக்கியவர், பின்னே சென்றவர்கள் தொடக்கு உடையவர்.

தொடக்கு நாட்கள் வைதிகமுறையில் முத்தீ வளர்க்காதவர்களுக்கு இறந்த நாள்முதல் கணிக்கப்படல் வேண்டும். (சிவபூசையோடு தீ வேட்கும். குருமாருக்குத் தகனம் செய்த நாள்முதல் கணிக்குக) இரவில் பிறப்பு நிகழ்ந்தால் அடுத்துச் சூரியன் உதிக்குமுன் உள்ள நாளே கொள்க. (மேலை நாட்டு முறையில், இரவு 12 மணிக்குப்பின் அடுத்தநாள் எனக் கொள்ளக் கூடாது)

பிறப்புத் தொடக்குக்கு இடையில் இறப்புவரின், இறப்புக் கணக்கின் பின்னரே தொடக்கு கழியும், இறப்புத் தொடக்குக்கு நடுவில் பிறப்பு வந்தால, மரணத்தொடக்குடன் அது நீங்கும். ஒரு மரணத் தொடக்கு முடியுமுன் மற்றொரு மரணம் வந்தால் பிந்திய தொடக்கு முடிவிலேதான் இரண்டு தொடக்கும் நீங்கும் முந்தியதற்குரிய கிரியைகளும் பிந்தியதன் முடிவிலேயே செய்ய வேண்டும்.

சபிண்டருள் ஒரு தொடக்கு வந்த செய்தி தூர இடத்தில் நிகழ்ந்ததை ஒரு தொடக்குக் கழியும் நாளில் கேட்டால் மேலும்

இரண்டு நாள் தொடக்குக் காக்க. அச்செய்தி - உதாரணமாக, அந்நிய தேசத்தில் இறப்பு நிகழ்ந்த செய்தி - மூன்று மாதத்துற் கிடைத்தால் மூன்று இராத்திரி தொடக்குக்காக்க. ஒரு வருஷத்துக்குள் கிடைத்தால் ஒரு நாள் காக்க . ஒருவர் இறந்தசெய்திதொடக்கு எல்லைக்குள் கிடைத்தால் மீதி நாட்கள் மட்டும் கொள்க: ஊம் அயல்நாட்டின் ஒருவர் இறந்த செய்தி சகோதரருக்கு 20 ம் நாள் கிடைத்தல் மீதி 10 நாள் ஆசௌசம் காக்க, தொடக்கு எல்லை கழிந்து ஒருவருடத்துள் பெற்றோரின் மரணத்தைக் கேள்விப் பட்டால் மகன் முழுத் தொடக்குக் காலமும் காக்க வேண்டும். அவர்களுக்கு உரிய கிரியை அங்கு செய்யப் பட்டிருந்தால் 3 நாள் காத்தால் போதும்.

தொடக்கு காலத்தில் சந்தியாவந்தனம் செய்யலாம் (மானஸிகமாயேனும் செய்க) ஞான நூல்களை ஓதுவதைச் சமய தீட்சை பெற்றோர் ஆசௌசத்திலும் சிவபூஜை செய்யலாம். தாமரை இலையில் நீர் போல் அவர் மனத்தில் தொடக்குப்பற்றாது பக்தி, வைராக்கியம், ஞானம் இல்லாதோர் அகப்பூசை செய்க. அப்போது குரு அன்றேல் ஒத்ததீட்சையுடையவர் அவருடைய புறப்பூசையைச் செய்யவேண்டும். ஆனால் எத்தகுதி உடையவரும் பரார்த்த பூசை (பர - அர்த்தம் ஸ்ரீ பிறர் பொருட்டு கோவில் முதலியவற்றில்) செய்யக்கூடாது ஆசௌசம் உடையவர் கோவில் வெளிவீதியில் நின்று வழிபடலாம் உயர் தீட்சை பெற்றோர் மண்டபத்துள் நிற்கலாம். தொடக்குக் காலத்தில் கோவிலுக்குப் பூ எடுத்துக் கொடுக்கக் கூடாது. உருத்திராக்கமாலை தரிக்கக்கூடாது.

## பூப்பு

பெண்கள் முதற்பூசை மாதவிலக்குக் காலத்தில் மூன்று நாள் தொடக்குக்கொள்க. 18 நாட்களுள் மீண்டும் அடையாளம் கண்டால் ஒரு நாள் தொடக்கு 19 நாளில் ஆயின் 2 நாளும் 20 நாள் ஆயின் 3 நாளும் கொள்க ஆன்மீக வாழ்வில் நம்பிக்கையுள்ளோர் 3 நாளும் முழுகுதல் செய்யார். இக்காலத்தில் அகப்பூசை வழிபாடு செய்யலாம். அவர்களை அறிந்தோ அறியாமலோ தொடுவோர் முழுகி, உரிய மந்திர ஜபம் செய்து சுத்திபெறுகின்றனர்.





## மயிர் களைதல்

தொடக்கு நீக்கும் போது மயிர்களைதல் அவசியம் என முன்னர் கூறப்பட்டது. சில கிராமங்களில் சவக்கிரியை தொடங்குமுன் மழித்தல் வழக்கமாய் உள்ளது. தொடக்குக் கழியும் தினத்தில் கிரியைகளுக்கு முன் களைதலே சாத்திரசம்மதம் மத்தியானத்துக்குப் பின் மயிர்களைதல் விலக்கப்பட்டுள்ளது. தலைமுதல் மயிர்களைதல் விலக்கப்பட்டுள்ளது. தலைமுதல் மயிர்நீக்கப்படுவதால் முண்டிதம் எனப்படும் மகன் கடமை செய்யமுடியாமல் இன்னொருவர் தீக்கடன் முதலியன செய்தால் அவரும் அதனைச் செய்யலாம்.

# நீத்தார் கடன்கள்

நமது தாய் தந்தையர் தம்மைப் பெற்றேடுத்து இகலோக நன்மைக்காகவும் பரலோக நன்மைக்காகவும் வளர்க்கின்றனர். புத்திரன் இல்லாதவர்களுக்கு நற்கதி இல்லை என்றும் அவர்கள் புத் என்ற நகரத்தைச் சென்றடைவர் என்றும் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஒருவர் இறந்த பின் அவரது நன்மை கருதி அவரது பிள்ளைகள் முதலியோரினால் செய்யப்படும் கிரியைகள் அபரக்கிரிகைகள் எனப்படும் அபரம் - பிந்திய எனப்பொருள்படும். கிரியைகள் செய்வதனால் இறந்த ஆன்மா பாவங்களினின்றும் நீங்கி சிவத்துவம் அடையும் என்பது நம்பிக்கை தாய் தந்தையர்க்குச் செய்ய வேண்டிய கடமைகளை அவர்கள் உயிருடன் இருக்கும் போதும். இல்லாத போதும் பிள்ளைகள் தவறாது செய்தல் வேண்டும். அபரக் கிரியைகளின் பலனைச் சிவாகமங்களும், புராண இதிகாசங்களும் விளக்குகின்றன.

தாய் தந்தையரைப் பேணாது கடவுளை வழிபடல் பயன் தரா என்பது கௌசிர் வரலாறு மூலம் அறியலாம். அவர்களை வழிபடுவதாகிய ஒரு புண்ணியமே ஒரு பிறப்புக்குப் போதியதாகும்.

இல்லறத்தார்க்குரிய முக்கிய ஐவகைக் கடமைகளில் பிதிர்கடன் முக்கியமானதாலேயே திருவள்ளுவர் அதனை "தென்புலத்தார்" என முதலில் கூறியுள்ளார். பிதிர்க்கடன் செய்தோர் பெரும் பேறுகளும் சித்திகளும் பெறுவர் சிவ அருளுக்கு ஆளாவர். பிதிர்ப்படன் செய்யாதோர் சமய ஆசாரம் தவறியவராவர். பிதிரர் வருந்தின் பெருந்தீமைகள் நேரும்.

இறந்தபின் எமது தாய் தந்தையர்கள் வேறு உலகம் செல்வதால் அவர்கள் தமக்குத் தேவையான உணவையும் நீரையும் தேடிக் கொள்ள முடியாது. ஆதலால் அவர்கள் பிறர்கையை நம்பியே எதிர்பார்க்கிறார்கள். பசியாலும் தாகத்தாலும் வாடுகின்ற எமது பெற்றோர்களுக்கு விதி தவறாமல் குறிப்பிட்ட காலங்களில் மந்திரங்களைக் கூறி நாம் செய்யும் சிராத்தம் தர்ப்பணம் (எள்ளும் தண்ணீரும் இறைத்தல்) என்பன அவர்களிடம் போய்ச் சேரும்.

முறை தவறிச் செய்தாலும் செய்யாமல் இருந்தாலும் அவர்கள் பசியோடு வாடுவர் அப்போது கோபம் உண்டாவது இயற்கை எனவே இயல்பான அன்பை விட்டுச் சாபம் கொடுப்பார்கள். அதனால் தான் அவர்களுக்குச் சாபாயுதர்கள் என்று பெயர் (சாபத்தை ஆயுதமாக உடையவர்கள்) வயிறு நிறைந்து மனம் குளிர்ந்தால் பூரணமாக ஆசீர்வாதம் செய்வர். பிதிர்கள் மனம் மகிழ்ந்தால் புத்திரப் பேறு செல்வம், ஆரோக்கியம், கல்வி, கீர்த்தி முதலிய சகல சம்பத்துக்களும் உண்டாகும்.

குழந்தைப் பருவத்திலே உணவுதேடி உண்ண சிசுவிற் சக்தி இல்லை பெற்றோர் பசியறிந்து உணவூட்டி நோயுற்றால் மருந்தூட்டி தமதுடலையும் கவனியாமல் காக்கின்றனர். அதே போல் உடலை விட்டு ஜீவன் செல்லுமிடத்தில் தன் உணவைத் தேட முடியாமல் தவிக்கின்றது. நம்மை இளமையிலகாத்ததற்கு நன்றிபாராட்டவாவது ஈமக்கடன்களை நன்கு செய்யவேண்டும் என்று தர்மபாசம் நம்மைக் கட்டுப்படுத்துகின்றது. ஜீவன் ஓராண்டில் யமனிடம் கொண்டு போகப்படும்.

## எள்ளும் தர்ப்பையும்

யஜ்ஞ வாரக மூர்த்தியாகத் தோன்றிய மஹாவிஷ்ணுவின் மனத்திலிருந்து எள்ளும், பிராணனிலிருந்து நீரின் சாரமான தர்ப்பையும் தோன்றின. பகவான் விஷ்ணு அசுரர் குலத்திற்கு அந்தகன். அவர் பெயரைக் கூறினாலே அரக்கர் பயந்தோடுவர் ஆதலினால் விராத்த காலத்தில் சிராத்த சம்ரசஷக விஷ்ணுவை வரிக்கின்றோம். அவரிடம் உண்டான எள்ளையும் தர்ப்பையையும் உபயோகித்தால் அசுரர் கிட்ட வரமாட்டார். ஆதலால் சிராத்தம், தர்ப்பணம் செய்யமிடங்களிலெல்லாம் எள்ளைத் தூவுகிறோம் தர்ப்பை பவித்திரமானது என்ற சுருதி கூறுகிறது. தர்ப்பை பகைவரை விரட்டக்கூடிய அம்பு ஆகும். தர்ப்பை இல்லாத கர்மா இல்லை என்றே கூறலாம்.





## திசையின் முக்கியத்துவம்

தேவர், பித்ருக்கள், மனுஷ்யர், ருத்ரர் ஆகியவர்கள் ஒவ்வொரு திசையைத் தமக்கென ஏற்படுத்திக் கொண்டனர். கிழக்கு தேவர்கட்கும் மேற்கு மனிதர்கட்கும் தெற்கு பித்ருக்களுக்கும் வடக்கு ருத்தர்களுக்கும் என வேதம் கூறகிறது. பித்ரு லோகத்துக்குத் தலைவனான யமதர்மராஜன் தென்திசையிலையே இருக்கிறார். ஆதலால் பித்ருகர்மாக்கள் எல்லாவற்றையும் தெற்கு முகமாவே செய்ய வேண்டும். சிராத்தத்திற்கு தெற்கு நுனியாகத் தர்ப்பைகளைப் போட்டு அதன்மீது பித்ருக்களை ஆவாஹனம் செய்ய வேண்டும்.

## சிராத்தத்தின் தேவை

ஸபிண்டீகரணமாவது இறந்தவரை அவரது தந்தை, பாட்டன் முதலியவர்களுடன் பிண்டமளித்துச் சேர்த்துவிடும் கிரியையாகும். சிராத்தம் என்பது சிரத்தையுடன் செய்வது. எனவே இவற்றைச் சிறந்த முறையிலே செய்ய வேண்டும். மறுவுலகில் ஜீவனுக்கு வேண்டிய வஸ்திரம், குடை, தீர்த்த பாத்திரம், பாதுகை, படுக்கை முதலிய சகல பொருட்களையும் தானம் செய்ய வேண்டும். அவை இறந்தவருக்குச் கிடைத்து இன்பமளிக்கும்.

பசி, தாகம் அடங்குவதற்காக நித்ய சிராத்தம் செய்வதுண்டு இறந்த திதியில் 12 மாசியங்களும் 12 சோதகும்பமும் இடையில் ஊனமாசியம் முதலியனவும் (16) செய்து முடிவில் ஆப்திகம் செய்வது புத்திரர் கடமை.

## ஆன்மாவின் பயணம்

ஜீவன் வழியில் கிங்கரருடன் 16 இடங்களில் தங்குகின்றான் புத்திரன் செய்யும் சிராத்தம் அந்த லோகத்துக்கு ஏற்ற உணவாக ஜீவனுக்கு அளிக்கப்படும். அதறக்காகத்தான் சுடுகாட்டிலிருந்து திரும்பியதும் நக்ந சிராத்தம் செய்து வஸ்திரம், தீபம், தீத்தபாத்திரம் முதலியன தானம் கொடுக்கப்படுகின்றது. பிண்டத்தில் பாதிப்பகுதி பிரேதவுடலை வளர்க்கும், கால் பங்கு யம கிங்கரர்களுக்குத் திருப்தி தரும், அனால் அவர்கள் ஜீவனை இம்சிக்கமாட்டார்கள், மற்றொரு கால்பங்கு பிண்டதானம் செய்பவருக்கு நன்மை உண்டு பண்ணும்.

## அபரக் கிரிகைகள் வகை.

இவை தகனக் கிரியை, அத்தி சஞ்சயனம் அந்தியேட்டி, ஏகோதிட்டம் சபிண்டீகரணம், மாசிகம், சிராத்தம் எனப் பல பகதிகளை

உடையன. இவைகள் உத்தர கிரியை, சிராத்தக் கிரியை எனவும் அழைக்கப்படும். தீட்சை பெற்றோருக்கு மாத்திரம் சைவக் கிரியைகள் செய்யப்படும். உயர்ந்த நிலையிலுள்ள சிவனடியார்கள் சிவனேயாவர். அவர்களுக்குரிய உத்தர கிரியைகள் வழிபாடாக நடைபெறும் அவர்கள் சிராத்தம் குரு பூசையாக நட்சத்திர நாளில் நடைபெறும்.

## மரணக் கிரியைகள்

சுத்த சைவர்களுக்குச் செய்யும் தகனம் கிரியையில் மூன்று பகுதிகள் உள. அவையாவன: பேரிகையடித்தல், உடற்சுத்தி, ஆன்மசுத்தி என்பனவாகும்.

## பேரிகையடித்தல்.

ஆசாரியர் புண்ணியாகம் செய்து அந்த நீரினால் இடத்தையும் பொருளையும் சுத்தி பண்ணி மேளத்திலே பிரமா, விசுஷ்ணு, உருத்திரன் முதலிய மூர்த்திகளைப் பூசித்து மேளமடிப்பர். மேளமடிக்கும் போது சொல்லும் மந்திரம் வாக்கியத்தின் பொருள் ''இறந்த ஆன்மா நன்மையடைய வேண்டும். எனவும், பூமியிலும் மறு உலகங்களிலும் உள்ள யாவரும் வாழவும், அசுரர் போன்ற கொடியோர் அடங்கவும், சகல உயிரினங்களுக்கும் ஐசுவரியம் உண்டாகவும் வேண்டும். மிருகம், பறவை முதலிய உயிரினங்களுக்கும் நன்மை உண்டாக வேண்டுமெனவும் உமாதேவியார் கட்டளைப்படி பேரிகை அடிக்கிறேன். சிவபெருமான் இதனை இரட்சிக்க'' என்பதாகும். (இன்று ஆசாரியர் இதனை அடிப்பதில்லை. இதற்கு அறிகுறியாக மணியை மாத்திரம் அடிக்கிறார்.)

## உடற்சுத்தி

சிவாசாரியர் பந்தலின் நடுவில் சிவ கும்பமும், உருத்திர கும்பமும் வைத்து அவற்றின் முன் ஓமாக்கினியை வளர்த்து சிவனையும் உருத்திரனையும் வழிபடுவர். எண்ணெய், பஞ்சகவ்வியம், இளநீர், மஞ்சள், நீர், சிவகும்ப நீர் ஆகியவைகளில் இறந்தவர் உடலை நீராடடிச் சுத்திசெய்து, புத்தாடை புனைந்து நீறு சாத்தி பூச்சூடி, பிரணவமான தர்ப்பையில் வைப்பர்.

சிவாசாரியர் பஞ்சசுத்திகளையும், சகளீகரணத்தையும் செய்து, அக்கினி வளர்த்து, அட்டதிக்குத் தேவர்களையும், சிவனையும் வழிபட்டு அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவார். கும்பத்திலிருந்த சிவனை





உடலின் மீது எழுந்தருளும்படி வேண்டி வழிபாடு செய்வார். இருதயத்தில் சிவனை ஆவாகனம் செய்து கொள்வார். பின்னர் ஆசாரியர் இறந்தவரின் நித்திய அனுட்டானக் குற்றங்களைத் தீர்க்க ஆகுதி செய்து. அவ்வுடலுக்கும் தனக்கும் நாடிச்சந்தானம் செய்து, அழைக்கப்பட்ட ஆன்மாவைத் தன் இருதயத்திற்குக் கொண்வந்து உருத்திரனைத் தியானித்துப் பூரணாகுதியுடன் உருத்திர மூர்த்தியை அடையும் வழியில் விடுவர்

## சுண்ணம் இடித்தலும் பந்தம் ஏற்றுதலும்:

பாவங்களை நீக்குவதற்காகச் சுண்ணம் இடிக்கப்படுகின்றது. பாவங்கள் அகன்றதும் திருவருள் உண்டாவதற்காகப் பந்தம் ஏற்றப்படும். இவைகளைத் தொடர்ந்து திருமுறைகள் ஓதப் பெறும்.

## சுடலை சேர்தல் :-

உடலைச் சுடலைக்கு எடுத்துச் செல்லும் பொழுது அட்டதிக்குத் தேவர்களின் ஆசியைப் பெறுவதற்காக வழியிலே நெற்பொரி தூவப்படும். (சைவாசாரமுள்ள ஒரவரே இதனைச் செய்யத்தக்கவராவர்) ஓமாக்கினியிலிருந்து உருத்திரனை ஆவாகித்த சிவாக்கினியும், கும்பமும் உடன் எடுத்துச் செல்லப்படும். சுடலையில் நான்கு முழு நீளம், இரண்டு முழ அகலமான இடத்தில் மஞ்சள் குங்குமம் இட்டு விறகு அடுக்கப்பட்டிருக்கும் இடம் சிதாத்தானம் என்று பெயர் பெறும். இச்சிதாத்தானத்தில் அடுக்கப்பட்ட விறகினைச் சுற்றி வந்து அதன் மீது உடலை வைத்துத் தற்புருட மந்திரம் சொல்லி நீரையும் அரிசியையும் இறந்தவர் வாயில் இடுவர்.

## தீயிடல்

கும்பத்துடனும் சிவாக்கினியுடனும் உடலைச் சுற்றி வந்து கும்ப நீரை உடலுக்குத் தெளித்து குடத்தை முன்பாக நிலத்திற் போட்டு சிவாக்கினியை விறகின்கண் இட்டு எரியச் செய்வர். கொள்ளி வைத்தவர் பின் நீர்க்கரையில் நீராடி வீடு செல்வார் தீ இடும் பொழுது ''அக்கினி தேவனே பரிசுத்தமாயிருக்கின்ற உடலின் மந்திரத்தாலுண்டான பூரணாகுதியை ஏற்றுக் கொள்ளும்'' என நினைத்துக் கொண்டே தீயிட வேண்டும்.

**அத்தி சஞ்சயனம் :-**

அத்தி சஞ்சயனம் என்பது ஏரிக்கப்பட்ட உடலிலிருந்து எலும்புகளையும் சாம்பலையும் எடுத்துப் புண்ணிய நீரில் சேர்த்தலாகும். அத்தி - எலும்பு, சஞ்சயனம் - கரைத்தல் இஃது கால், தொப்பூழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய இடங்களில் உள்ள எலும்புகளைச் சாம்பலுடன் எடுத்து, பால் உள்ள பாத்திரத்தில் இட்டுக் கொண்டு புண்ணிய நீரில் சேர்த்து வழிபாடு செய்யலாம். அத்தியைப் புண்ணிய தீர்த்தத்தில் இடுவதினால் ஆன்மா புண்ணிய உலகம் அடையும் என்பது பொருள், சாம்பல் அள்ளுதல் என்று இன்று கூறப்படுவது இதுவேயாம்.

**நக்னதானம் :-**

இது தகனக் கிரியை முடிந்தபின் இறந்தவரின் பசி, தாகம் முதலியவற்றை நீக்கும் பொருட்டு குடும்பத்தரால் ஆசாரியருக்கு ஆடை, அரிசி முதலியவற்றைத் தானமாகக் கொடுத்தல்.

**அந்தியேட்டி :-**

இது ஆசௌசக் கடைசியில் செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும் அந்திய கடைசி நாள், இட்டி - யாகம் இறந்தவரின் ஆன்ம சித்திக்காக இது நடைபெறுகிறது. இறந்தவரின் சமய அனுட்டானத்திலுள்ள குற்றங்கள் இதனால் தரும் புண்ணிய நீர்க்கரையில் நிகழும் கிரியை இது இதனால் இதனை நீர்க்கடன் என்றும் கூறுவர்.

**பாடான பூசை ( பாசுஷாண பூசை)**

ஒரு கல்லை வைத்து, இறந்தவரின் ஆன்மாவை மந்திரத்தால் அதில் வருவித்து அதற்குச் செய்யும் பூசை. இப்பூசையினாலும், இதனோடு கூடிய மற்றும் கிரியைகளினாலும் பிரிந்த ஆன்மாவானது சிவ பதவியை அடையத்தக்கதாகின்றது. பூசையினால் அதற்குத் திருப்தியும், மற்றவைகளால் ஆன்மாவின் குற்ற நீக்கமும் உண்டாகும்.

**ஏகோதிட்டம்**

ஆசௌசம் நீங்கிய அடுத்த நாள் இறந்தவருடைய ஆன்ம சுத்திக்காகவும், நற்கதியடையும் பொருட்டும் செய்யப்படும் கிரியை. இக்கிரியையில் இருக்கும் ஆசாரியரை இறந்த ஆளாகப் பாவனை செய்து, அவருக்கு ஒரு ஆண்டுக்குப் போதுமான அளவு





பொருட்களைத் தானமாகக் கொடுத்து ஒரு வருடம் முடியும் வரை எதிர்ப்படாமல் இருக்கச் செய்தல். தானமாகக் கொடுக்கப்பட வேண்டிய பொருட்கள் உணவுப் பொருட்கள், உடை, திருநீற்றுப்பை, செபமாலை, குடை, மிதிதடி, பொன் முதலியவையாகும்

**சபீண்டிகரணம் :**

ஏகோதிட்டத்திற்கு அடுத்த நாளிலே பிதிர் தேவர்களோடு இறந்தவரைச் சேர்த்தற்கு நடைபெறும் கிரியை. சுபீண்டிகரணத்தால் ஆன்மா சுத்திபெற்று சிவலோகம் சேரும் இக்கரியை பிண்டமிட்டு செய்வதனால் இது சபீண்டிகரணம் எனப்படும். பிண்டத்துக்குரிய பொருள்கள் அரசி, எள், உழுந்து, பால், தேன், பழம், சர்க்கரை ஆகியனவாகும். பிதிரர்க்குச் செய்யும் இக்கிரியையைப் பிதிர் தேவர்கள் பெற்று, இறந்தவர்க்கும் அவரது தலைமுறை முன்னோர்களுக்கும் வழங்குவர் இதற்காகவே சிவபெருமான் பிதிரர்களைப் படைத்துள்ளார்.

**மாசிகங்கள் :**

இறந்த நாள் முதல் இருபத்தேழாம் நாளின் மேல் மூன்று நாட்களுக்குள் செய்யப்படுவது ஊன மாசிகமாகும். நாற்பதாம் நாள் முதல் நாற்பத்தைந்துக்குள் செய்யப்படுவது திரைபட்ச மாசிகமாகும். நூற்றெழுவது நாளின் மேல் பத்து நாட்களுக்குள் செய்யப்படுவது ஊனகூஷாண் மாசிகமாகும். முந்நூற்ற நாற்பத்தைந்தாம் நாளின் மேல் பதினைந்து நாட்களுக்குள் ஆப்திகத்திற்கு முன் செய்யப்படுவது ஊனாப்திக மாசிகமாகும்.

இந்த நான்கு மாசிகங்களும் இரண்டாம் மாதம் முதற் பன்னிரண்டாம் மாதம் வரை இறந்த திதிகளிற் செய்யப்படும் பதினொரு மாசிகங்களுமாக பதினைந்து மாசிகங்கள் செய்யப்பட வேண்டும்.

ஊன மாசிகம், திரைபட்ச மாசிகம், ஊனகூஷாண் மாசிகம், ஊனாப்திக மாசிகம் என்னும் நான்கு மாசிகங்களையும் வாராதி தோசுஷங்கள் இல்லாத நாட்களிற் செய்தல் நன்று.

**செய்யத்தகாத நாட்கள் :**

திரிதியை, சதுர்த்தசி, அமாவாசை என்னும் திதிகளிலும், வெள்ளிக் கிழமையிலும், கேட்டை, பூரம், பூரட்டாதி, ஆயிலியம், மூலம், கார்த்திகை முதலான நட்சத்திரங்களிலும், திரிபுசுஷ்கர யோகம், துவிபுசுஷ்கர போகம் என்பவற்றிலும் செய்தலாகாது.

*திரிபக்ஷ்கர யோகமாவது துவிதியை, சப்தமி, துவாதசி என்னும் திதிகளும் கார்த்திகை, உத்தரம், உத்தராடம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி என்னும் நட்சத்திரங்களும் ஞாயிறு செவ்வாய், சனி என்னும் வாரங்களுமாகிய மூன்றும் கூடுவது திரிபுக்ஷ்கர யோகமாகும்.*

*துவிபுக்ஷ்கர யோகமாவது இம்மூன்றுள் இரண்டு கூடுவதாகும். மற்றைய பதினொரு மாசிகங்களையும் காலதோக்ஷம் பாராது அவ்வத் திதிகளிற் செய்யலாம்.*

**சிராத்தம் :-**

*சிரத்தையோடு செய்யப்படுவது சிராத்தம் எனப்படும். சிரத்தையானது பற்று, அன்பு, இறந்தவர்களில் அன்பும், பற்றும் உடையவர்களினாலே தான் இக்கிரியை செய்யப்பட வேண்டும். இக்கிரியையின் உயிர்நிலை அன்பு ஆகும்.*

*சிராத்தம் பிதிர் கருமம் என்னும் பொருளி உடையதாய் எல்லாப் பிதிர் கருமங்களையும் குறிப்பது ஆயினும் இது நம் நாட்டில் ஆட்டைத் திவசம், திவசம் என்பவற்றையே குறிப்பிடுகின்றது. திவசம் திதி எனப்படும்.*

**ஆட்டைத் திவசம் :-**

*ஒருவர் இறந்த ஒரு ஆண்டின் பின் செய்யும் சிராத்தம் ஆப்திகம் அல்லது ஆட்டைத் திவசம் எனவும் அதனையடுத்து ஆண்டு தோறும் அதே திதியில் செய்யப்படுவதை வருட சிராத்தம் அல்லது திவசம் எனவும் கூறப்படும்.*

**நைமித்திய சிராத்தம் :**

*பிதா மாதா முதலாயினோர் இறந்த தினமும் திதியும் வருடந்தோறும் வரும் பொழுது விசுவாசத்தோடு விதிப்படி செய்வது நைமித்திய சிராத்தம் எனப்படும். எத்திதியில் இறந்தாரோ அத்திதியில் சிராத்தம் செய்தல் உத்தமமாம். திதி தெரியாவிடின் அந்த மாத அமாவாசை அல்லது அட்டமியில் செய்யலாம். மாதம் தெரியாவிடின் ஆடி, மாசி, புரட்டாதி, மார்கழி மாதங்களில் அத்திதிகளில் செய்யலாம். இவைகளில் எதுவும் தெரியாதோர் புரட்டாதி மாதத்தில் வரும் மாளயபக்க நாட்களில் செய்து கொள்ளலாம். (புரட்டாதி மாதத்து அபரபக்கத்துப் பிரதமை முதல் அமாவாசை வரையான காலம் மாளயபக்க காலமாகும்)*





**தீர்த்த சிராத்தம்**

*மாதந்தோறும் அமாவாசையில் பிதா மாதாக்களின் பொருட்டுச் செய்யப்படும் பிதிர் தேவர்களின் தாகசாந்திக் கருமம்.*

*அமாவாசை சூரிய கிரகணம், சந்திர கிரகணம், வியதீபாத யோகம், உத்தராயணம், சித்திரை வருடப்பிறப்பு, மாதப்பிறப்பு, கார்த்திகை மாத சுக்கிலபக்க நவமி, புரட்டாதி மாதக் கிருக்ஷ்ண பக்கத் திரியோதிசி என்னும் இந்நாட்களில் புண்ணிய தீர்த்தத்தில் நீராடிப் பிதிர் தர்ப்பணம் செய்து சிவனடியாரோடு உண்ணல் தீர்த்த சிராத்தம் எனப்படும்.*

*நீராடுபவர்களுடைய பாவங்களை நீக்கி, அவர்களுக்கு வீடு பேறு கொடுப்பதற்காகவும், புண்ணிய காலங்களிலே தென்புலத்தாரைக் குறித்துத் தர்ப்பணம் முதலியவற்றைச் செய்து அவர்களைப் பிறவிக் கடலினின்றும் கரையேற்றுவதற்காகவும் கருணாநிதியாகிய சிவபெருமான் தமது வடிவையே தீர்த்த வடிமாக்கியுள்ளார்.*

**அமாவாசை சிராத்தம் :**

*மனிதர்களுடைய ஒரு மாதம் பிதிரர்களுக்கு ஒரு நாளாம் (சுக்கில பக்கம் இரவும், கிருக்ஷ்ண பக்கம் பகலுமாகும்) ஆதலால் மாதந்தோறும் வரும் அமாவாசையில் தர்ப்பணம் செய்து விரதம் அனுட்டிக்க வேண்டும்.*

**எள்ளும் தண்ணீரும் இறைத்தல் :-**

*தருப்பணம் திருப்திக்காகச் செய்யப்படுவது தருப்பையைக் பிடித்து அத்தருப்பை மூலத்திலிருந்து எள்ளும் கலந்த நீரைச் சுட்டு விரல் மூலம் விழச் செய்யப்படுவது. இந்நேரம் தலைமுறையான பிதிர்கள் பெயர் சொல்லிச் செய்யப்படும் தருப்பண முடிவிலே, "என் குலப் பிதிர்களே, பூமியில் விடப்பட்ட இந்த நீரினால் நற்கதியையும் திருப்தியையும் அடையுங்கள்." என்று சொல்லித் தருப்பை எள்ளுடன் தீர்த்தத்தில் போடப்படும்.*

**கயா சிரார்த்தம் :-**

*கயா காசியிலுள்ள தீர்த்தம். இதில் பிதிர்களை எண்ணிச் சிராத்தம் செய்யின் வேறு சிராத்தம் செய்ய வேண்டியதில்லை என ஞான நூல்கள் கூறும். இச்சிராத்தம் பிதிர்களுக்குத் திருப்தியைக் கொடுப்பதுடன், போக மோட்சங்களையும் கொடுக்கும் கயா சிராத்தத்தால் ஏழு கோத்திரத்துள்ள*

நூற்றொரு குலமும் விருத்தியாகும். இப்படியான வேறும் பல புண்ய தீர்த்தங்கள் சிராத்தம் செய்வதற்கு உண்டு, அவை: அயோத்தி, மதுரை, மாயை, காஞ்சி, அவந்தி, துவாரகை, திருக்கேதீச்சரம், திருகோணமலை கன்னியா நீரூற்றுக்கள், கீரிமலை, முன்னேஸ்வரம் போன்றவையாகும்.

**சிராத்தம் செய்யும் இடம் :-**

இறந்தவர் வீடு, திருநந்தவனம், மலை, திருக்கோயில், புண்ணிய தீர்த்தக்கரை, குருவின் மனை போன்ற கோமயத்தினால் சுத்திசெய்யப்பட்ட இடங்கள் சிறப்பானவை.

**சிராத்தத்துக்குரி பொருட்கள் :-**

எள், நெல்லரிசி, கோதுமை, சிறு பயறு, உழுந்து, சர்க்கரை, தேன், பசுநெய், பசுப்பால், பசுத்தயிர், எண்ணெய், சிகைக்காய், உப்பு, புளி, மிளகு, சீரகம், மஞ்சள், இஞ்சிக் கிழங்கு, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், தேங்காய், இளநீர், புடோலங்காய், அவரைக்காய், பாகற்காய், எலுமிச்சம் பழம், நெல்லிக்காய், சிறு கிழங்கு, வள்ளிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, சுக்கு, கராம்பு, சாதிக்காய் முதலியன.

**சிராத்தத்திற்கு ஆகாத பொருட்கள்**

கடலை பீர்க்கங்காய், நீற்றுப் பூசணிக்காய், முருங்கைக்காய், அத்திக்காய், வாழைப்பூ, வெங்காயம், வெள்ளைப் பூண்டு, கொல்லை, எருமைப்பால், எருமைத்தயிர் முதலியன.

**பொருள் இல்லாதவர் சிராத்தம் :-**

சிராத்தத்திற்குப் பொருள் இல்லாதவர் காய்கனி. கிழங்கு, எள்ளு, இவைகளையேனும், சற்பாத்திரப் பிராமணருக்குக் கொடுத்துப் பிரதட்சண நமஸ்காரம் செய்து திலதருப்பணம் பண்ணித் தான் திருப்தியாக உணவு செய்தல் வேண்டும். தருப்பணம் செய்வதற்கும் வல்லமை இல்லாதிருப்பின் பசுக்கூட்டங்களுக்குப் புல்லைக் கொடுத்தல் மேலாம்.





**சிராத்ததிற்கு உபயோகிக்கும் பத்திரம் - மலர்.**

துளசி, வில்வம், தாமரை, சண்பகம், அறுகு, புன்னை, நந்தியாவத்தை, எட்பூ, மருக்கொழுந்த, வெட்டிவேர் முதலியன.

**சிராத்தத்திற்கு ஆகாதவை :-**

மகிழம்பூ, தாழம்பூ, அலரிப்பூ, சிறுசண்பகப்பூ முதலியன.

**சிராத்த தினத்திலே செய்யத்தக்க புண்ணிய காரியங்கள் : -**

சற்பாத்திரர்களுக்கு அன்னதானம் ஆடை வகை முதலியன வழங்கலும், திருக்கோயிலிலே கடவுளுக்கு அபிடேகம், பூசை, திருவிளக்கேற்றுதல் முதலியனவுமாகும்.

**சிராத்த தினத்தில் செய்யத்தகாதன :-**

தயிர் கடைதல், நெல் குத்துதல், நெய் முதலிய பொருட்களைக் கொடுத்தல், வாங்குதல், கண்ணீர் விடுதல், கோபித்தல், பொய் சொல்லுதல், சிந்திய அன்னத்தை மிதித்தல், சிராத்தம் கொடுக்கத்தக்க பாத்திரர்.

பிதிர்தேவர் பொருட்டு இறந்தவர் பெற்ற தீசையெனும் அதன் மேலான தீட்சையேனும் பெற்ற சற்பாத்திரர்களுக்குச் சிராத்தம் கொடுக்கலாம்

வேத சிவாகமங்களை ஓதி உணர்ந்து பாவங்களை விலக்கித் தருமங்களைக் கைக்கொண்டு கடவுளை மெய்யன்போடு வழிபடுபவரும், தம்மைப் போலவே பிறரும் நன்னெறியில் நின்று உய்ய வேண்டுமென்று எண்ணி அவர்களுக்கு அந்நெறியை உபதேசிப்பவருமானோர் சந்பாத்திரராவர் அசற்பாத்திரர்க்குச் சிராத்தம் கொடுத்தலாகாது வேத சிவாகமங்களைக் கற்று அதன்வழி நில்லாதோரும் பிறர்க்கு அந்நெறியைக் கூறி வழிப்படுத்தாதோரும் சிராத்தத்திலே அன்புடன் கொடுத்தவைகளை திருப்தியுடன் ஏற்றுக் கொள்ளாதவருமானோர் அசற்பாத்திரராவர் இவர்களுக்குச் சிராத்தம் கொடுத்தலாற் பலன் உண்டாவதில்லை.

**சிராத்தம் நடைபெறும் போது செய்யத்தக்கன -**

வேதபாராயணம் செய்தல், தமிழ் வேதங்களையும், புராணங்களையும், ஓதுதல், இவை பிதர்களுக்கு மிகத் **திருப்தியானவையாம்.**

**உபசாரம் :-**

*சிராத்தம் முடிவில் ஆசாரியருக்கு உபசாரம் செய்து அவரை உபசரித்து வணங்கி ஆசீர்வாதம் பெறுதல் வேண்டும். உபசாரம் செய்யும் போது அஃது ஆசாரியரக்கென்று எண்ணிக் கொடுத்தலாகாது பிதிர் தேவர்களுக்கென்றே எண்ணிக் கொடுத்தல் வேண்டும்.*

**சிராத்த காலம் :-**

இராக்காலத்திலும், சூரியோதயம் முதல் ஆறு நாழிகை வரையுள்ள காலப் பொழுதிலும் இராக்காலத்தின் இறுதி முகூர்த்தமாகிய இரண்டு நாழிகையும் பகற்காலத்தில் இறுதி முகூர்த்தமாகிய இரண்டு சந்தியா காலமும் தவிர்த்து ஏனைய நேரங்கள் பிதிர் சிராத்தத்திற்கு உரியனவாகும்.

**உணவு :-**


*சிராத்த காலங்களிலே அதிதிகளுக்கு அன்னங் கொடுத்தல் பெரும் புண்ணியமாகும். பரமசிவனும், பார்வதி அம்மையும், முருகக் கடவுளும் திருமாலும், பிரமாவும் தருமதேவதையுமாகிய சகலரும் கூடி அதிதி வடிவாய் வருவரென்று மெய்நூல்கள் கூறுகின்றன.*

**ப. சிவானந்தசர்மா**
*(கோப்பாய் சிவம்)*

அற்புதக் கீர்த்தி வேண்டின்
ஆனந்த வாழக்கை வேண்டின்
நற்பொருள் குவிதல் வேண்டின்
நலமெல்லாம் மெருக வேண்டின்

கற்பக மூர்த்தி தெய்வக்
களஞ்சியத் திருக்கைசென்று
பொற்பதம் பணிந்து பாரீர்!
பொய்யில்லை! கண்ட உண்மை
- கவியரசர் கண்ணதாசன்-






தேர் உவமமே திவ்விய வுளக்கசிவே
தாரணியின் சுபாங்மே தகைமைத் தலைவனே
ஏர் சிவந்த உழவனே எல்லோர் மனலய
ஏணியே நற் கணவனே சீரிய நற்பாந்தந்தையே
சீர் மாமனே சித்தம் பிள்ளையாரின் சீறடியே துதை
சிவணு சிறுபிள்ளை யுள்ளமே பேர
பேர்த்தியர் பிரியாவன்பு பூத்த தவ அப்பரனே
பண்பின் நிகரிலா வாத்மனே மனதின்
கூர்ப்பகமே கூம்பே ஓம்
கதிரிப்பிள்ளை பாலசிங்கமே!



பூமாது தனைமணந்த புயல்வண்ணப்
பெருமாளும், புலவர் பேற்றும்
நாமாது தனைமணந்த நான்முகனும்.
போர் மாதும் நயக்கும் எண்தோள்
கோமானும் தானே என்று உணர்த்தற்கே
பிரணவகுஞ் சரமாய்த் தோன்றி
மாமாவின் முகத்தானை உயிர்த்தானை
நினைந்து இறைஞ்சி வழுத்து வாமே.

# உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார்

## திருவூஞ்சற் பதிகம்

ஆக்கம் பண்டிதர் ஸ்ரீலஸ்ரீ கை. நமசிவாயக்குருக்கள் கருணையூர்

### காப்பு

சீர்பூத்த நெற்கதிர்கள் தலைகள் சாய்க்க
திகழ் பெண்ணை முல்லையினோடினிதேமேவும்
பார்பூத்த பண்டகையில் கோயில் கொண்ட
பரஞ்சுடராம் ஐங்கரன் மேலூஞ்சல்பாட
ஏர்பூத்த பிரணவத்தின் வடிவேயாகி
இதய மலர்த்தேனாக ஊறுந்தெய்வக்
கார்பூதக்கும் ஆனைமுகன் கண்முன்னின்று
கருவினைகள் ஓட்டி எம்மைக்காப்பதாமே.

### நூல்

முன்னீரில் விளைமுத்தால் விதானம் சேர்ந்து
முகிழ்க்கு மோர் பவளத்தால் தூண்களாற்றிச்
சத்தஞ் சேர் சதுர்மறைகள் கயிறதாகச்
சிவம் விளக்குமாக பொற் பலனை யேற்றிக்
கந்த நிறை அழகு மலர்மாலை நாற்றிக்
கணபதியை அடியார் கணம் ஏத்தி நிற்கப்
புத்தி மகிழ் அருள் வழங்கும் மூர்த்தங் கொண்ட
பண்ட கையிற் பிள்ளையாரே யாடீருஞ்சல்

பெண்மையுயர் வல்பையாஞ் சத்தியோடு
விளங்கு பொரு தும்பிமுகம் முன்னே தோன்ற
வண்ணமுறு அங்குசத் தோடினிதே மேவும்
வினை கடியும் பாசமுமே விளங்கித் தோன்ற
விண்ணிலுறை தேவருமே விழவுகாண
விந்தை நிறை இப்பதிக்கே வரவு தேக்கப்
பண் நிறைந்த பாடற் தொகை அடியாரோதப்
பண்டகையூர்ப் பிள்ளையாரேயாடீருஞ்சல்.

சித்திபுத்தி நாயகிகள் இணைந்தே நிற்கச்
சோதி மணிமுடி தாமும் இலங்கித் தோன்ற
வித்தகத்துப் பரகிருதி வடிவமாகி
விளங்குமொரு மோதகமும் முன்னே தோன்ற
பக்தி தரு கீதை பெறு நூலேயான
பாரதத்தை எழுதுமொரு மருப்புத்தாங்கி
சித்தி யெலாந் தரும் வண்ண கோயில் கொண்ட
ஸ்ரீ வண்ண விநாயகரேயாடீருஞ்சல்.

திகழுமொரு மன்னவனும் தம்பிதானும்
திருமுறைகள் பெறவே நீ துணையுமாகிச்
சகம் புகழும் அல்லையிடம் நான்கு பெற்றுத்
தந்தனையே தமிழ் மூன்றுந் தரணிக்காக
அகம் மவர முகம் மகிழும் அடியார் வாழும்
உடுப்பிட்டி பண்டகை கண் கோயில் கொண்டே
தகவுடைய விழாப் பொலியும் மூர்த்தியாகிச்
சாருமொரு கணபதியே யாடீருஞ்சல்

சந்திரனே வெண்கொற்றக் குடையைத் தாங்க
சவித்துருவும் உயர் ஆல வட்டமேந்த
இந்திரனும் நிழல் காட்டு மாடிகாட்ட
ஊர் வசிப் பெண் சிசியோடு கவரிவீச
விந்தை பெறு தாளலயம் நந்தி பேச
வித்தகமாய் கலைமகளும் வீணை மீட்க
சுந்தரஞ்சேர் இலக்குமி காளாஞ்சி கொள்ளத்
திருவிளங்கும் மூர்த்தியரேயாடீருஞ்சல்.

உற்றவர்க்குத் துணையாவாயாடீருஞ்சல்
உடுப்பிட்டி பண்டையீராடீருஞ்சல்
கற்றவைக்குக் கவியா வாயாடீருசல்
கயமுகற்குக் கசந்தவனேயாடீருஞ்சல்
புற்றரவப் பூணூலாயாடீருஞ்சல்
புதுவிழாக்காண் பவரே யாடீருஞ்சல்
அற்புதத்தின் நாயகரே யாடீருஞ்சல்
உடுப்பிட்டிப் பண்டகையீராடீருஞ்சல்

கந்தரத்தில் செங்கழுநீர் மாலையாடக்
கார் முகத்தி வொளிரு மொருபடாமுமாட
தொந்தி வயிற்றலை பாயும் பூனூலாட
சோதி பெறும் பூந்துகிலு சேர்ந்தேயாட
அந்தி நிறத்தைங் கரனின் கிரீடமாட
அடங்கு மொரு பாசத் தோடங்கு சமேயாட
மந்திரஞ் சேர் தண்டையது சிலம் போடாட
மகா கணபதியே யாடீருஞ்சல்





தேங்கு கங்கைச் சிவசுதனே யாடீருஞ்சல்
சீர் சதுர்த்தி மகிழ்பவரே யாடீருஞ்சல்
ஓங்குவளர் ஆலயத்தாயாடீருஞ்சல்
உலகளந்தான் மருமகனே யாடீருங்சல்
தீந்தமிழின் பெருங்கறையாய் ஆடீருஞ்சல்
சதயத்தி லுதித்தவனே யாடீருஞ்சல்
மாங்கனியைப் பெற்றவனே யாடீருஞ்சல்
மகிழமொரு பண்டைகையீராடீருஞ்சல்

தேரதற்கு அச்சறுத்தாடீருஞ்சல்
சங்ரற்கு நாயகனேயாடீருஞ்சல்
பாரதத்தின் தாபகரேயாடீருஞ்சல்
பெருக நதி விட்டரோயாடீருஞ்சல்
பாரெழுத்தின் மந்திரரேயாடீருஞ்சல்
பரம் பொருளின் புத்திரரேயாடீருஞ்சல்
மேகவண்ணன் மருமகனே யாடீருஞ்சல்
மகாபணபதியே யாடீருஞ்சல்

விக்கினங்கள் தீர்ப்பவனே யாடீருஞ்சல்
வேண்டு வர மளிப்பனே யாடீருஞ்சல்
அக்குமணி மாலையரே யாடீருஞ்சல்
அஞ்சலெனக் காப்பவனேயாடீருஞ்சல்
இக்கு நனி விரும்பியவா அடீருஞ்சல்
ஏக்க மெலாந் தீர்ப்பவனே யாடீருஞ்சல்
மக்க அருள் செய்பவரே ஆடிருஞ்சல்
மகாகணபதியே யாடீருஞ்சல்

## வாழி

விக்கினங்கள் வேரறுக்கும் வேந்தேவாழி
விந்தை தரு நாயகனே வாழவாழி
துக்கங்கள் துடைத்து விடும் துணையே வாழி
துர்க்கை தரு தூய ஒளிப் பிள்ளை வாழி
பக்குவங்கள் பண்ணுமனப் பக்தர் வாழி
பக்தி முத்தி செய்யுமனச் சித்தர் வாழி
மிக்கு வரு மாலயமும் பணியும் வாழி
மேன்மையுயர் சைவநெறி வாழிவாழி.

### எச்சரிக்கை

தேவேபரம் பொருளானாய் எச்சரீக்கை
சித்தம் மிசை துளிர் தேனே எச்சரீக்கை
நாவே துதிமறையானாய் எச்சரீக்கை
நந்தா வொலி முதலானாய் எச்சரீக்கை
சேவேறுரு சுதனாவாய் எச்சரீக்கை
சத்தம் எழு முதலானாய் எச்சரீக்கை
பூவே தலத்துரு வானாய் எச்சரீக்கை
பண்டகை யமர் தானு எச்சரீக்கை

### பராக்கு

ஐங்கரத்தை கொண்ட ஒருதிருமேனியரே பராக்கு
ஓங்காரத்துட் பொருளுமானவரே பராக்கு
பாங்கு பெறு சித்தி புத்தி நாயகரே பராக்கு
பங்கிலுறை வல்லமைபக்கு பதியவரே பராக்கு
மாங்கனியைக் கொண்ட கரமுதலே பராக்கு
மந்திரத்து உட்பொருளுமானவரே பராக்கு
காங்கேயன் வேண்டக் கரியானவரே பராக்கு
கதித்த பெரும் பண்டகையிற் பெரியவரே பராக்கு

### லாலி

சதுர்த்திக் கொரு நாயகனே லாலிலாலி
தமிழ் வேகம் தந்தவனே லாலிலாலி
பேதித்து வளர்ப்பவனே லாலிலாலி
பேழை வயிற்றைங்கரனே லாலிலாலி
ஆதி முதலானவனே லாலிலாலி
உற்வசத்தின் திருவுருவே லாலிலாலி
வேதனைகள் தீர்ப்பவனே லாலிலாலி
வேண்டு மகா கணபதியே லாலிலாலி

### மங்களம்

பண்டகை சேர் பணபதிக்கு மங்களம் - நல்ல
புதுமை நிறை விழாவினற்கு மங்களம்
கொண்ட லொத்த மேனியற்க மங்களம் - போற்று
குண்டலினி சத்தியர்க்க மங்களம்
பண்டு முதல் காவலற்கு மங்களம் - தோற்று
பிரகிருதி நாயகற்கு மங்களம்
கண்டு உருவக்காட்சியற்கு மங்களம் - கூப்பு
கரமலரைக் காப்பவற்கு மங்களம் - மங்களம்.







# நன்றி நவில்கின்றோம்.

**அமரர்ஸ்ரீமான் கதிர்ப்பிள்ளை பாலசிங்கம்**
அவர்கள் இறைபதம் அடைந்தவேளை
ஆறுதலழித்த உற்றார்,உறவினர்கள், அயலவர்கள்,
நண்பர்கள், அனைவருக்கும், நேரிலும், தந்தி,
தொலைபேசி, கடிதங்கள், மற்றும், பத்திரிகை
கண்ணீர் அஞ்சலி மூலம் அனுதாபம், தெரிவித்தோருக்கும்,
மலர்வளையம், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் என்பதன் மூலம்,
அஞ்சலி செலுத்தியோருக்கும், இறுதிக்கிரியைகளிலும் எல்லா
உதவிகளையும் வழங்கிய அன்பர்களுக்கும், கிரியை சிறப்புற
நடத்திய சிவாச்சாரியார்களுக்கும், அந்தியேட்டி
வீட்டுக்கிரியைகளில் பங்குபற்றி சிறப்பித்தோருக்கும்,
அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்தித்தோருக்கும்,
இந்தநினைவேட்டினை அச்சிடுவதற்கு
உதவிய வெற்றி விநாயகர் ஒவ்செற் பிறின்ரேர்ஸ்,
நிறுவனத்தினருக்கும்
எங்கள் உள்ளம் நிறைந்த நன்றிகளை
இவ்விடத்தில் தெரிவிப்பதில்
மனநிறைவு அடைகிறோம்.

**இலக்ஷ்மி பவனம்.**
**பழைய விதானைவளவு,**
**பண்டகை,**
**உடுப்பிட்டி.**

இங்ஙனம்
**குடும்பத்தினர்.**

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | கு | | | | | | | |
| | | | | | | ள் | ரு | ய | | | | | | |
| | | | | யா | ளு | ம் | ப | ர | னே | நீ | | | | |
| | | | ரை | வ | கு | !! | ண் | ர | ச | வா | தே | | | |
| | | ள் | செ | யு | ம் | பா | ட | லு | றை | தி | வ் | ய | | |
| | ரு | வ | ண | கா | ல் | ழ | க | ன | யு | யே | தி | ப | ண | |
| சு | க | வா | ரி | யே | சி | வ | ப் | பே | ற | ரு | ள் | செ | ய் | க |
| | ரா | த | சோ | ச் | னை | ன் | பி | ப் | ர | க | ற் | வே | ம் | |
| | சே | ர் | தி | ரு | மா | லு | ள் | ள | த் | து | ம | ரு | கா | |
| | | பே | ர் | மா | ல | வ | ளை | யா | ரை | ம | தா | யா | | |
| | | | அ | ரு | ட் | கோ | யா | னை | மு | க | ளை | | | |
| | | | | ய | வ் | தி | ரே | த | மு | அ | | | | |

தே ர்

தேர் அமுதே ரேதிவ்ய வருட்கோ யானைமுகனையா
தாமரை யானை வலமார்பே
சேர் திருமா லுள்ளத்து மருகாம் வேற்கரப்பிள்ளைச்
சோதரா சுகவாரியே சிவம்
பேறருள் செய்கண பதியே யுனகழல்
காணவருள் செயும்
பாடலுறை திவ்ய தேவா சரண்புகுவரை யாளும்
பரனே நீ யருள் குருபண்டகைப் பிள்ளையாரே..

வெற்றி விநாயகர் ஓவ்செற் பிறின்ரேர்ஸ், செட்டித்தெரு, பருத்தித்துறை.